## அத்தியாயம் 11

# முக்காடிட்டுக்கொள்ளுவது மற்றும் இராப்போஜனத்தைக்குறித்த அறிவுறுத்தல்

### முக்காடிட்டுக்கொள்ளுவது (11:1-16)

அதிகாரம் ஒன்றில் முக்காடிட்டுக் கொள்ளுவதை பற்றியதான பவுலின் அறிவுறுத்தலை விட புதிய உடன்படிக்கையில் உள்ள ஒரு சில வசன பகுதிகள் குழப்பமாகவே இருக்கிறது. கொரிந்துவில் குறிப்பிட்ட கலாச்சாரம் மற்றும் மதத்தை குறித்த கவலை நிலவியிருந்தது. புதிய உடன்படிக்கையின் யாதொரு பகுதியிலும் இந்த கேள்வி தோன்றின-தில்லை. கொரிந்து ஜனங்களின் அனுதின வாழ்க்கையில் இரண்டாயிரம் ஆண்டுகள் கழித்தும் மறு அமைப்பை பெற கடினமாக இருந்த நடை முறைகள் மற்றும் வழக்கங்கள் உள்ளடங்கியிருந்தது. கொரிந்து ஒரு சர்வதேச பட்டணமாக இருந்தது. பவுலின் காலத்திற்கு சுமார் நூற்றாண்டுகளுக்கு முன்பு ரோம குடியேறிகளால் போடப்பட்ட அஸ்திவாரம் தனித்துவமான முத்திரையை போட்டிருந்தது. கிரேக்கர்கள் சந்தைகள் மற்றும் சுற்றுப்புறத்திலிருந்து வடிகட்டப்பட்டிருந்தார்கள், மற்றும் யூதர்கள் தங்கியிருந்தது ஒரு விசேஷமானதாக இருந்தது.

சபையானது ஜெப ஆலயத்திலிருந்து தன்னுடைய போதகங்களுக்கும் மற்றும் புதிய விசுவாசிகளுக்கும் ஈர்த்துச் செல்லப்பட்டிருந்தது, ஆனால் அதற்கு ஒரு ஆரோக்கியமான அந்நிய கூறுகள் இருந்தது. பக்தர்கள் வழிபாட்டிற்கு, கிரேக்க மற்றும் ரோம தேவர்கள் இஸ்ரவேலின் தேவனோடு கூட போட்டியிட்டது. சமீபத்தில் மரித்த பேரரசரின் குடும்பத்தாருக்கு வழிபட சன்னதிகள் மற்றும் ஆலயங்கள் பிரசித்திப் பெற்றிருந்தது. பல்வேறுபட்ட மத நம்பிக்கைகள் சமுதாய அழுத்தங்களை ஏற்படுத்தியது, ஆனால் அது மட்டுமே கலவரத்திற்கு ஒரு முகாந்திரம் அல்ல. கொரிந்து, செல்வந்தர் மற்றும் ஏழை என்ற அகன்ற இடைவெளி இருந்த ஒரு பரந்து விரிந்த

பட்டணமாக இருந்தது. முக்காடிட்டுக் கொள்ளுவது பற்றிய பவுலின் கண்டித்தல், இந்த ஒரு கலப்பு மற்றும் பல பாகங்களை கொண்ட கலாச்சாரத்தின் பின்னணிக்கு எதிராக வாசிக்க வேண்டியிருந்தது.

ஒரு கடினமான வேத பகுதியை விளக்க சந்தர்ப்ப சூழல் மிக அவசியமாக இருக்கிறது; ஆனால் கொரிந்துவில் முக்காடிட்டுக் கொள்ளுவது, வழக்கத்தை விட முக்கியமானதாக இருக்கிறது. 11ம் அதிகாரம் 8:1ல், ஆரம்பித்த விக்கிரக ஆராதனைகள் குறித்த கேள்வியின் ஒரு தொடர்பாக அல்லது 12:1 ஆரம்பித்த உள் வேலைகள் மற்றும் சபையின் ஆராதனையைக் குறித்த புதிய கேள்வியை எழுப்புகிறதா? ஆங்கிலத்தில் “இப்பொழுதும் இதை குறித்து” என்கின்ற சூத்திரம் 8:1 மற்றும் 12:1க்கு இடையில் தோன்றவில்லை. ஆனால் Anthony C. Thiselton 11:2ல் “உங்களை புகழுகிறேன்” என்ற வார்த்தையோடு நிருபம் ஒரு புதிய திசையை எடுக்கிறது என்று வாதாடுகிறார். அவருடைய கண்ணோட்டம் இவ்வாறாக இருக்கிறது: “… பின்னணியில் இருக்கின்ற [8:1-11:1] பலவீனமான சகோதரர்களிடத்தில் அன்பினாலே பொறுமையாக இருப்பதே ஆகும்; [11:2-14:40]ல் ஒன்று கூடி ஆராதிக்கும் சபையின் ஒழுக்கத்தின் சூழலை குறிக்கிறது.”[1]

8:1-11:1ன் ஒன்றுபடுத்தியிருக்கின்ற ஆய்வுப் பொருள் விக்கிரக ஆராதனைக்கு ஒரு நல்ல கிறிஸ்தவ மறுமொழி மற்றும் 11:2-34 அந்த ஆய்வு பொருள் மற்றும் வேறொரு பகுதிகளுக்கும், சபை கூடுதல் மற்றும் ஆராதனைக்கும் கொண்டு செல்லுகிறது என்று Thiseltonனின் வார்த்தையை ஒப்புக் கொள்ளாமல் மறுத்தரவு கொடுக்கக் கூடும். பலவீனமான சகோதரனை குறித்த பாரம் ஆலயங்களில் விக்கிரகத்திற்கு படைத்ததை புசிப்பதை எதிர்த்து அப்போஸ்தலனின் தடை செய்வது மட்டுமே அவனால் கருதப்படுகிறது. முக்காடிட்டுக் கொள்ளுவது கூட விக்கிரக ஆராதனைக்கு சம்பந்தப்பட்டிருக்கக் கூடும்.

Richard E. Oster, Jr., என்பவர் கொரிந்துவில் குறிப்பிட்ட ஒரு மத சூழலிலிருந்து முக்காடிட்டுக் கொள்ளுவதைப் பற்றிய கேள்விகள் வளர்ந்தது என்று வாக்குவாதம் செய்யும் எண்ணத்தக்க ஆராய்ச்சியை வழங்கினார். முக்காடிட்டுக் கொள்ளுவதை பற்றி மற்றும் இராப்போஜனத்தை குறித்து கண்டித்தல், அதிகாரம் 8லிருந்து 10வரையில் விக்கிரகங்களுக்கு படைத்ததை குறித்த கேள்வி மற்றும் அதிகாரம் 12லிருந்து 14ல்.[2] உள்ள சபையில் நடந்துகொள்ளும் முறைமைகளுக்கு இடையில் ஒரு உபயோகமான மாற்றங்களை கொடுக்கிறது என்று முடித்தார்.

## பவுலின் உதாரணம் (11:1)

**[1]நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறது போல, நீங்கள் என்னைப் பின்பற்றுகிறவர்களாயிருங்கள்.**

**வசனம் 1.** சாதாரணமான ஒப்புதலினால், வேதாகமத்தை விளக்குபவர் இந்த வசனமானது அதிகாரம் 10. இறுதிப்பகுதிக்கு உரியது என்ற முடிவுக்கு வந்தார்கள். விக்கிரக ஸ்தலங்களின் விக்கிரகத்திற்கு படைத்ததைப் புசிப்பதில் கடிந்து கொண்ட பிறகு, அவர் கொரிந்து சபையினரை தேவனை மகிமைப்படுத்துவதில் **தன்னை பின் பற்றுமாறு மற்றும்** யூதர்களையோ அல்லது புறஜாதியாரையோ குற்றப்படுத்தாதபடி கேட்டுக் கொள்கிறார் (காண்க 4:16). அவர் பிலிப்பி மற்றும் தெசலோனிக்கேயாவில் உள்ளவர்களையும் அவ்வாறே செய்யும்படி அழைத்தார் (பிலி. 3:17; 4:9; 1 தெச. 1:6; 2 தெச. 3:9).

## பவுலின் அறிமுகம் (11:2, 3)

**[2]சகோதரரே, நீங்கள் எல்லாவற்றிலும் என்னை நினைத்துக் கொண்டு, நான் உங்களுக்கு ஒப்புவித்தபடி நீங்கள் கட்டளைகளைக் கைக்கொண்டு வருகிறதினிமித்தம் உங்களைப் புகழுகிறேன். [3]ஒவ்வொரு புருஷனுக்கும் கிறிஸ்து தலையாயிருக்கிறாரென்றும், ஸ்திரீக்குப் புருஷன் தலையாயிருக்கிறானென்றும், கிறிஸ்துவுக்கு தேவன் தலையாயிருக்கிறாரென்றும், நீங்கள் அறியவேண்டுமென்று விரும்புகிறேன்.**

11:2-16ல் பவுல் ஆரம்ப சர்ச்சையை குறித்து இரண்டு காரியங்கள் கவனிக்கத்தக்கதாக இருக்கிறது. முதலாவது, கொரிந்து சபையில் வழக்கமாக இருக்கும் ஒரு சூழ்நிலையை அப்போஸ்தலன் உரையாற்றிக் கொண்டிருக்கக் கூடும், காரணம் புதிய உடன் படிக்கையில் வேறெங்கும் முக்காடிடுவதைப் பற்றி குறிப்பிடப்படவில்லை. இரண்டாவது, 8:1ன் ஆரம்பத்திலிருந்து, கலாச்சாரத்தில் இருக்கும் ஒரு சில விக்கிரக காரியங்களுக்கு கிறிஸ்தவர்கள் சோதனைக்கு உள்ளாகும் காரியங்கள் நிருபத்தின் விஷயமாக இருந்தது. வெளிப்படையாக, முக்காடிட்டுக் கொள்ளுவது என்பது கொரிந்து கிறிஸ்தவர்கள் அந்நிய பழக்க வழக்கங்களுக்கு தொடர்புடையதாக இருந்தது.

கொரிந்தியர் வாழ்க்கையின் வேறு சில கூறுகள் கூட முக்காடிட்டுக் கொள்ளுவதைப் பற்றிய குழப்பங்களுக்கும் காரணமாக இருந்திருக்கலாம். கொரிந்துவின் சமுதாய வாழ்க்கையில் கிரேக்கம் அல்ல, பதிலாக ரோம ஒழுக்கம் நிலவியிருந்தது என்பதை கவனிப்பது

முக்கியமானதாக இருக்கிறது. ஆண்கள் மற்றும் பெண்கள் இருவருக்கும் தங்கள் தெய்வங்களை வணங்கும்போது முக்காடிட்டுக் கொள்ளுவது ஒரு ரோம வழக்கமாக இருந்ததையும் நாம் எண்ண வேண்டும். கூடுதலாக, யூத வட்டாரத்தில், முக்காடிட்டுக் கொள்ளுவது அர்ப்பணிப்பின் ஒரு சித்தாந்தமாக இருந்தது. கருத்தில் கொள்ளும் இன்னொரு காரியம் கணவன் தந்தைக்கு மதத்தைக் குறித்த காரியங்களில் உறுதியான அதிகாரம் இருந்தது. இறுதியாக, மதம் அல்லது பொது கூட்டங்களில் ஆண்கள் மற்றும் பெண்கள் சர்வ சாதாரணமாக ஒருவரோடு ஒருவர் கலந்து கொள்ளவில்லை என்பதையும் நாம் நினைவு கூர வேண்டும்.

ஆகிலும், அதிகாரம் 14 தெளிவு படுத்துகிறது போல, சபை கூடுகையில் பெண்கள் மற்றும் ஆண்கள் ஒருவரோடு ஒருவர் கலந்தார்கள். கூடுதலாக, அவர்கள் தனிப்பட்ட வீடுகளில் சந்தித்தார்கள், முறைமையின் படிக்கு வழிவகுக்கும் ஒரு அமைப்பு. கொரிந்து சபையின் கிறிஸ்தவர்கள் சமுதாய விதிமுறைகளை, குறிப்பிட்டு, ஒரு கலந்த சமுதாய அமைப்பில் ஆண்கள் மற்றும் பெண்கள் மரியாதையோடு நடந்து கொள்ளும் முறையை பிரயோகப்படுத்துவதில் குழப்பம் மற்றும் வேறுபாட்டை அனுபவித்தார்கள். கிறிஸ்தவ விசுவாசத்தை ஏற்றுக் கொள்ளுவதில், ஆண்கள் மற்றும் பெண்கள் தங்களுக்கு சமகால சமுதாய மரபுகளோடு கூட தேவனை ஆராதிப்பதை கைக்கொள்ள முயற்சித்ததின் விளைவாக குழப்பங்கள் நிலவியது. கேள்விகள் உணர்வுப்பூர்வமாக மற்றும் வலுவான கருத்துக்களை உள்ளடக்கியதாக இருந்தது.

**வசனம் 2.** அப்போஸ்தலன் தான் சொல்ல வேண்டிய காரியத்திற்காக கொரிந்தியரை ஆயத்தப்படுத்துகையில், அவருடைய வார்த்தை எல்லோரையும் பிரியப்படுத்தாது என்று அவர் அறிந்திருந்தார். அவர் விஷயத்தை அடித்தளத்திலிருந்து, அதாவது அவருக்கு சபை கொடுத்த கனத்திற்கு, புகழ்ச்சி மற்றும் பாராட்டுக்களோடு அணுகினார். இதற்கு முன்பு, முக்காடிட்டுக் கொள்ளுவதைப் பற்றிய கேள்விகள் எழும்பியிருந்தது, இப்பொழுதோ கொரிந்து கிறிஸ்தவர்கள் பவுல் அவர்களுக்குப் போதித்ததை **நினைவுகூர** முடிந்தது. அவர் அவர்களுக்கு கடக்கப் பட்ட **பாரம்பரியத்தை** அவர்கள் பின்பற்ற ஆர்வம் கொண்டிருந் தார்கள். பின் வரவிருக்கும் கடிந்துகொள்ளுதலின் வார்த்தை அல்லது அவர்கள் ஒப்புக்கொள்ளாத போதனை வந்தாலும் அவருடைய புகழ்ச்சிக்கு முன் இலகுவாக கருதப்பட்டது.

ஆங்கிலத்தில் "இப்பொழுதும் இதை குறித்து" என்ற வழக்கமான வார்த்தையோடு பவுல் முக்காடைக் குறித்த சர்ச்சையை அறிமுகப்படுத்தாமல், **உங்களை புகழுகிறேன்** என்றே ஆரம்பித்தார். ஆதலால், இந்த கற்பித்தல்கள் 8:1ல்: "விக்கிரகங்களுக்குப்

படைக்கப்பட்டவைகளை ...” அறிமுகப் படுத்தின சாமானியமான வகையினத்தில் வெளிப்படையாக வருகிறது. முக்காடிடுவது விக்கிரகங்களுக்கு படைத்தவைகளுக்கு நேரடியாக இணைக்கப்படாமல் இருக்கையில், விக்கிரக வழிபாடுகளின் கலாச்சாரத்தில் விற்கப்பட்ட கிறிஸ்தவனாக வாழுவதற்கு சம்பந்தப்படுகிறது. இந்த அமைப்பில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்று கிறிஸ்தவர்கள் தெரிந்திருக்க வேண்டி இருந்தது. ஒருவேளை கொரிந்தியரின் நிருபத்தை கொண்டு வந்திருந்த மூன்று மனிதர்கள் (16:17) முக்காடிடும் பிரச்சனை பற்றி பவுலின் கவனத்திற்கு கொண்டு வந்திருக்கக் கூடும்.

**வசனம் 3.** மிக சரியாக, **தலை** என்றால் பவுலின் பொருள் என்ன என்பது இந்த வசனத்தை விவாதிப்பதில் ஒரு அடிப்படை பிரச்சனையாக இருக்கிறது. முதலாவது, நவீன ஆங்கிலத்தில், சாதாரணமாக “தலை” என்பது *கட்டுப்படுத்தும் வல்லமை அல்லது அதிகாரத்தை* குறிக்கிறது: ஒரு நிறுவனத்தின் “தலை” இயக்குனர்களின் குழுவாக இருக்கலாம். இரண்டாவது, பழங்காலத்தில் அந்த வார்த்தையை அவ்வாறாக பயன்படுத்தவில்லை என்று ஒரு சிலர் சொல்லியிருக்கிறார்கள். அப்படியானால், “தலை” என்பதை ஒரு மூலாதாரம், “நிதி மூலம்,” அல்லது முக்கியமான இடம், “ஒரு வகுப்பின் தலைவன்” என்ற அர்த்தத்தில் பயன்ப் படுத்தப்பட்டிருக்கிறது என்று வாக்குவாதம் செய்யப்-படுகிறது. அப்படியிருக்க, கேள்வியில் இருந்தது கிறிஸ்துவின் மீது தேவனின் அதிகாரமோ, அல்லது ஸ்திரீயின் மீது புருஷனின் அதிகாரமோ அல்ல. அதைவிட, ஒரு ஸ்தானத்தின் முக்கியத்துவத்தை குறித்து இருந்தது. உதாரணமாக, முதலில், புருஷனின் சிருஷ்டிப்பு பிறகு ஸ்திரீயின் சிருஷ்டிப்பு ஆனது. இந்த நோக்கத்தின்படி, பவுலின் பொருள் முக்காடிடுவதை குறித்து, புருஷனின் அதிகாரம் அல்லது மனைவியின் கீழ்ப்படிதலுக்கு மேலாக புருஷனின் சிருஷ்டிப்பின் முதன்மையின் அறி-குறியை கூறுகிறது.

இந்த பகுதியில், பவுலின் வழக்கமான வார்த்தை “தலை” (κεφαλή, *kephalē*) என்பதை பவுல் கொரிந்துவின் சூழ்நிலையை நிரூபிக்க இந்த ஒரு வார்த்தையை உண்டாக்கினார் என்று Oster கூறுகிறார். அவர் தொடர்ந்து இவ்வாறாக கூறினார்,

> குறிப்பாக, பவுல் கிறிஸ்து மற்றும் புருஷர்களின் நடுவில் இருக்கும் உறவை குறிக்க வேறெங்கும் இந்த “தலை” (*kephalē*) என்ற வார்த்தையை உபயோகிப்பதில்லை. அல்லது புருஷர்கள் மற்றும் ஸ்திரீகள் நடுவில் இருக்கும் உறவை சித்தரிக்க பவுல் இந்த வார்த்தையை உபயோகித்தார் என்ற உறுதிப்படுத்தப்படாத ஆதாரங்கள் வேறெங்கும் இல்லை.[3]

எபேசியர் 5:21-33 கணவர் மற்றும் மனைவிகளைப் பற்றியே, புருஷர்கள் மற்றும் ஸ்திரீகள் நடுவில் உள்ள மிக சாதாரணமானதை

குறித்து அல்ல என்று அவர் அடிக்குறிப்பில் எழுதியிருந்தார். ஆகிலும் கணவர் மற்றும் மனைவிகளைக் குறித்த உறவை புருஷர்கள் மற்றும் ஸ்திரீகளின் உறவிலிருந்து பிரிக்கக் கூடுமோ என்று வியக்கலாம். ஒரு முறை புருஷர்கள் மற்றும் ஸ்திரீகளின் உறவு தெளிவான பிறகு, முடிவில், திருமணம் முடித்திருக்கும் ஒரு புருஷன் மற்றும் ஒரு ஸ்திரீயை குறிக்கிறது.

"தலை" எந்த ஒரு அதிகாரத்தின் தாற்பரியத்தையும் கைக் கொள்ளவில்லை என்ற கூற்று தீவிரமாக விவாதிக்கப்படுகிறது. கிரேக்க-ரோம உலகம் "தலை" என்னும் வார்த்தையை ஒருவருடைய அதிகாரத்தை குறித்து பயன்படுத்தப்பட்டது என்று ஒரு சில அறிஞர்கள் நிரூபிக்கிறார்கள். Joseph A. Fitzmyer LXX, Philo மற்றும் Josephus எழுத்துக்களிலிருந்து, மற்றும் வேறு மூலகங்களிலிருந்து சாட்சியத்தை பரிசீலித்தார். Tarsusன் பவுல் போன்ற ஒரு ஹெலனிஸ்டிக் யூத எழுத்தாளன் 1 கொரிந்தியர் 11:3ல் κεφαλή "'தலை' என்பது ஒருவர் மீது அதிகாரம் அல்லது மேலாதிக்கத்தை செலுத்துவதை குறிக்கிறது."[4] சந்தர்ப்ப சூழலில் *kephalē* என்பது முக்கியமான இடத்தை குறிக்கிறது என்று யாராகிலும் சொல்லலாம் மற்றும் அது அதிகாரத்தை குறிக்கிறது என்றும் சாதிக்கலாம்.

கிரேக்க கலாச்சாரத்தில் ஆண்கள் மற்றும் பெண்கள் கலந்துரையாடுவது அரியதாக இருந்தது,[5] ஆதலால் சபை கூடுகையில் ஒன்றாக இருப்பது அவர்களுக்கு கூச்சமாக இருந்தது (காண்க 14:34). அவர்களுடைய பங்கைக் குறித்து கேள்விகள் இருந்திருக்கலாம். அதிகாரம் மற்றும் கீழ்ப்படிதலின் பங்கின் கேள்வியானது சபையில் ஒவ்வொரு அங்கத்தினரும் எவ்வாறு ஒருவரை ஒருவர் போஷாக்கு அளிப்பது மற்றும் போதிப்பது என்ற கேள்வியோடு பிணைக்கப்பட்டது.

## பவுலின் விளக்கம் (11:4-16)

**[4]ஜெபம்பண்ணுகிறபோதாவது, தீர்க்கதரிசனஞ் சொல்லுகிற போதாவது, தன்தலையை மூடிக் கொண்டிருக்கிற எந்தப் புருஷனும் தன் தலையைக் கனவீனப்படுத்துகிறான். [5]ஜெபம் பண்ணுகிற போதாவது, தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறபோதாவது, தன் தலையை மூடிக் கொள்ளாதிருக்கிற எந்த ஸ்திரீயும் தன் தலையைக் கனவீனப்படுத்துகிறாள்; அது அவளுக்குத் தலை சிரைக்கப்பட்டது-போலிருக்குமே. [6]ஸ்திரீயானவள் முக்காடிட்டுக் கொள்ளாவிட்டால் தலைமயிரையும் கத்தரித்துப் போடக்கடவள்; தலைமயிர் கத்தரிக்கப்படுகிறதும் சிரைக்கப்படுகிறதும் ஸ்திரீக்கு வெட்கமானால் முக்காடிட்டுக் கொண்டிருக்கக்கடவள். [7]புருஷனானவன் தேவனுடைய சாயலும் மகிமையுமாயிருக்கிற படியால், தன் தலையை**

**மூடிக்கொள்ள வேண்டுவதில்லை; ஸ்திரீயானவள் புருஷனுடைய மகிமையாயிருக்கிறாள். [8]புருஷன் ஸ்திரீயிலிருந்து தோன்றின-வனல்ல, ஸ்திரீயே புருஷனிலிருந்து தோன்றினவள். [9]புருஷன் ஸ்திரீக்காகச் சிருஷ்டிக்கப்பட்டவனல்ல, ஸ்திரீயே புருஷனுக்காகச் சிருஷ்-டிக்கப்பட்டவள். [10]ஆகையால் தூதர்களினிமித்தம் ஸ்திரீயானவள் தலையின்மேல் முக்காடிட்டுக்கொள்ளவேண்டும். [11]ஆகிலும் கர்த்தருக்குள் ஸ்திரீயில்லாமல் புருஷனுமில்லை, புருஷனில்லாமல் ஸ்திரீயுமில்லை. [12]ஸ்திரீயானவள் புருஷனிலிருந்து தோன்றுகிறது போல, புருஷனும் ஸ்திரீயினால் தோன்றுகிறான்; சகலமும் தேவனால் உண்டாயிருக்கிறது. [13]ஸ்திரீயானவள் தேவனை நோக்கி ஜெபம்-பண்ணுகையில், தன் தலையை மூடிக் கொள்ளாமலிருக்கிறது இலட்சணமாயிருக் குமோ என்று உங்களுக்குள்ளே நிதானித்துக் கொள்ளுங்கள். [14]புருஷன் மயிரை நீளமாய் வளர்க்கிறது அவனுக்கு கனவீனமாயிருக்கிறதென்றும், [15]ஸ்திரீ தன் மயிரை நீளமாய் வளர்க்கிறது அவளுக்கு மகிமையாயிருக்கிறதென்றும் சுபாவமே உங்களுக்குப் போதிக்கிறதில்லையா? தலைமயிர் அவளுக்கு முக்காடாகக் கொடுக்கப்பட்டிருக்கிறதே. [16]ஆகிலும் ஒருவன் வாக்குவாதஞ்செய்ய மனதாயிருந்தால், எங்களுக்கும், தேவனுடைய சபைகளுக்கும், அப்படிப்பட்ட வழக்கமில்லையென்று அறியக் கடவன்.**

**வசனம் 4.** ஜெபிப்பது பரிசுத்தாவியின் ஒரு விசேஷித்த வரம் என்று சுட்டிக்காட்டலாம் அல்லது காட்டாமல் இருக்கலாம், ஆனால் தீர்க்கதரிசனம் நிச்சயமாகவே அவ்வாறாக சுட்டிக்காட்டுகிறது. சபை கூடுகையில் அவர்கள் பழக்கத்திலிருந்த இந்த இரண்டு நடவடிக்கைகளையும் குறிப்பிட்டுக் கொண்டிருந்தான்.[6] தலையை மூடிக்கொண்டிருக்கிற எந்தப் புருஷனும் (வாஸ்த்தவத்தில், “தலையின்படி கொண்டிருப்பது”) என்ற சொற்றொடர் நீளமான கூந்தலை குறிக்கலாம், பின் தொடர்ந்து வரும் வசனங்கள் பவுல் தலையை மூடிக்கொள்ளுவதைப் பற்றிப் பேசினார் என்பதை தெளிவுபடுத்துகிறது. அப்போஸ்தலர், கூந்தல் அளிக்கும் இயற்கை மறைவுக்கும் புறம்பான மறைவுக்கும் வித்தியாசப்படுத்தினான். ஒருவருடைய கூந்தலின் நீளமே பிரச்சனையானால், ஒரு புருஷன் ஆராதனை செய்வதற்காக தன் தலையை சிரைக்க வேண்டும் என்று வாக்குவாதம் செய்தார் என்று தோன்றுகிறது. அத்தகைய தேவை நம்பக் கடினமாக இருக்கிறது. கூடுதலாக, ஒரு ஸ்திரீயின் கூந்தல் அவளுக்கு “மகிமை” (11:15) என்று குறிப்பிடுகிறார். ஒரு ஸ்திரீ யானவள் ஏன் தன் மகிமையை மூடிக்கொள்ள வேண்டும்? Ben Witherington IIIயின் படி,

> முடியைக் குறித்ததான பவுலின் சர்ச்சை (வசனங்கள் 14ஐத் தொடர்ந்து) முடிவில் ஒரு ஆதரிக்கும் வாக்குவாதமாக

கொடுக்கப்பட்டது, உதாரணமாக முக்காடிட்டுக் கொள்ளுவது போல. ... பிரச்சனை முக்காடிடுவது தான்.[7]

சமீபகால வர்ணனைகளோடு பழைய வர்ணனைகள், புருஷர்கள் முக்காடிடுவது ஒரு அணி இலக்கண உபகரணம் தரிக்கப்பட்டதை போல மற்றும் அதிலிருந்து புருஷ வாசகர்கள் மற்றும் ஸ்திரீ வாசகர்களை உரையாற்றலாம் என்றே பவுல் இவ்வாறு செய்தார் என்று வியாக்கியானம் செய்திருக்கிறார்கள். இந்த ஒரு ஆலோசனைப்படி, புருஷர்கள் தங்கள் தலைக்கு என்ன தரித்திருந்தார்கள் என்பதை குறித்து கவலை இல்லாமல் இருந்தார்; முக்காடிடுவதைக் குறித்த தன்னுடைய கடிந்துகொள்ளுதல் ஸ்திரீகளுக்கு மட்டுமாகவே இருந்தது. அத்தகைய வாசித்தல் ஒரு தவறான நோக்கங்கொண்டது என்று Oster நிரூபித்தார். சாதாரணமாக, அந்நிய தேவர்களின் ஆராதனையில் ரோம புருஷர் மற்றும் ஸ்திரீகள் முக்காடிட்டார்கள் என்று இலக்கிய மற்றும் தொல்லியல் ஆய்வு சுட்டிக்காட்டுகிறது.[8] கிறிஸ்தவ புருஷர்களுக்கு முக்காடிடுவதை சம்மந்தப்படுத்துவது அப்போஸ்தலருக்கு ஒரு முக்கியமான விஷயமாக இருந்தது.

முதலாம் நூற்றாண்டின் முதல் நடுவில், கொரிந்துவில் ரோம கலாச்சாரம் சூழப்பட்டிருந்தது. ரோம மத நடைமுறைகளில், ஆராதனை செய்கிறவர்கள் முக்கியமாக ஆண்கள், ஆனால் பெண்களும் கூட, தேவர்களுக்கு சம்பந்தப்பட்ட சடங்குகளின் போது ஏதாவது ஒரு முக்காட்டை போட்டுக் கொள்ள வேண்டும் என்று எதிர்ப்பார்த்தது. கொரிந்துவில் ரோம பாரம்பரியத்திலிருந்த கிறிஸ்தவர்கள் வெளிப்படையாகவே "ஜெபிக்கும் போது அல்லது தீர்க்கதரிசனம் உரைக்கும்போது" தங்களின் முக்காடிடும் பழக்கத்தை தொடர்ந்தார்கள். "ஆராதனை வேளையில் புருஷர்கள் முக்காடிடுவது, 11.3ல் சொல்லப்பட்ட புருஷ தலை மைத்துவத்திற்கு முரண்பாடாக இருக்கும்"[9] என்று பவுல் நம்பினதாக Oster கூறுகிறார்.

சந்தேகத்திற்கிடமின்றி, ரோம நடைமுறைகளிலிருந்து விலக்கவே கிறிஸ்தவ கூடுகையில் ஆண்கள் முக்காடிடும் பழக்கத்தை சீர்திருத்தவே பவுல் வகை தேடிக் கொண்டிருந்தான். அப்போஸ்தலர், ரோமர் அல்லது ரோமரல்லாதவர்கள் "ஜெபிக்கும்போது அல்லது தீர்க்கதரிசனம் சொல்லும்போது" முக்காடிடாத பெண்களையும் சீர்திருத்திக் கொண்டிருந்தார்.

Everett Ferguson சொன்னது, "... ரோம நடைமுறைகள் ஆண்கள் மற்றும் பெண்கள் இருவருக்கும் சார்ந்தது என்ற உண்மை இந்த விவரிப்பை சிக்கலாக்குகிறது."[10] அவர் எழுதினார்,

1 கொரிந்தியர் 11ன் சமுதாய சூழலை நாம் திரும்பக் கட்டும்போது, நாம் ஒரு சபை ஒரு செல்வந்தர் (அல்லது செல்வந்தர்கள்) அல்லது அனுதாபிகளின் வீட்டில் (அல்லது வீடுகளில்) ஒரு கூட்ட

> கிறிஸ்தவர்களை கற்பனை செய்து பார்க்கவேண்டும். அந்த வீட்டின் ஸ்திரீகள் வெளிப்படையாகப் பேசுகிறவர்களாக மற்றும் தன் வீட்டில் முக்காடிடாத பழக்கம் கொண்டிருந்தவர்களாக இருந்தார்கள். சூழ்நிலையின் ஒரு விசேஷித்த பாத்திரத்தினாலே "நீங்கள் சபையிலே கூடி வந்திருக்கும் போது" (1 கொரி. 11:18), "சபையாரெல்லாரும் ஏகமாய்க் கூடிவந்த" (1 கொரி. 14:23), சமயத்தில், ஒரு பொதுக் கூட்டத்திற்கு ஏற்ற வஸ்திரம் மற்றும் நடக்கையை குறித்து பவுல் சொல்லுகிறார்.[11]

**வசனம் 5.** ஒரு **ஸ்திரீயானவள் தான் முக்காடிடாமல் ஜெபித்தால் அல்லது தீர்க்கதரிசனம்** உரைத்தால் அவள் அவமானத்தைக் கொண்டு வரும் தலை, அது அவளுடைய தலையாகவே இருக்கிறது; அதாவது, பவுல் "தலை" என்ற வார்த்தையை 11:3ல் சொன்னபடியே,11:5லும் உருமாற்றமாகத்தான் கணவருக்கு சொன்னான் என்று சொல்ல காரணம் ஒன்றுமில்லை.

தீர்க்கதரிசனம் பரிசுத்த ஆவியானவரின் ஏவுதலினாலே சொல்லப்பட்டது. ஒருவேளை பவுல் தான் கருத்தில் கொண்டிருந்த ஜெபம் தீர்க்கதரிசனத்தின் ஒரு பகுதியாக இருந்திருக்கலாம். ஆவியானவரின் ஏவுதலினாலே "ஜெபித்து அல்லது தீர்க்கதரிசனம் சொல்லிக் கொண்டிருந்த" ஸ்திரீயின் கிரியையை தடை செய்ய அப்போஸ்தலன் கருதவில்லை; ஆனால், காரியம் அப்படியாக இருந்திருந்தாலும், அவள் புருஷர்கள் மற்றும் ஸ்திரீகள் நடுவில் இருக்கும் கலாச்சார வேறுபாட்டை அறிந்திருந்தாள் என்று குறிக்கும்படி அவள் முக்காடிட்டிருக்கும்படி அவர் சொல்லுகிறார் (14:34, 35ல் விமர்சனத்தைப் பாருங்கள்).

பவுல் ஒரு கிறிஸ்தவ ஸ்திரீ பொது இடங்களில் முக்காடிடாமல் வருவதை ஆட்சேபனை செய்ததின் காரணம் ஒரு வேளை அது அவருடைய யூத/ பரிசேய கல்வியில் வேரூன்றியிருக்கலாம் ஒரு யூத ஸ்திரீ விவாகம் செய்திருக்கும் போது, குறிப்பிட்ட மரியாதைச் சட்டங்களைப் பின்பற்றும்படி எதிர்பார்க்கப்பட்டிருந்தாள்:

> அவள் தன் தலைமயிரை மூடி, அது அவளுடைய முகவாய் கட்டையை தொட்டிருக்கும்படி முக்காடிட்டிருக்க வேண்டும். அவள் முக்காடு போடாமல் வீட்டின் வெளியே போகக் கூடாது என்ற வழக்கம் இருந்தது. கணவர் இதை விவாகரத்து செய்யும்படி ஒரு சாதகமாக வைத்து வரதட்சணையை திரும்ப தராமல் இருந்தது ஒரு வெட்கக்கேடாக இருந்தது.[12]

தேவனுக்கு முன் ஆண்கள் மற்றும் பெண்கள் சரிசமானமே (கலா. 3:28) என்பது இருவருக்கும் இடையில் கலாச்சார வேற்றுமை அகன்றிருந்தது என்றல்ல. கொரிந்துவில் கிறிஸ்தவ ஸ்திரீகள், முக்காடு போடாமல் ஜெபிப்பது அல்லது தீர்க்கதரிசனம் சொல்லுவது, பாரம்பரியம், தெய்வீக வெளிப்பாட்டின்படி (1 கொரி. 11:8, 9), மற்றும்

இயற்கையாகவே (11:14) தற்போதைய கலாச்சார விதி முறைகளை புறக்கணிப்பதின் மூலமாக தன்னை கனவீனப் படுத்துவது ஆகும்.

பவுல் தன்னுடைய வாக்குவாதத்தை அடிக்-கோடிட்டுக் காட்டும்படி உயர்வு நவிற்சியை பயன்-படுத்தினான். முக்காடுப் போடாமல் ஜெபிக்கும் அல்லது தீர்க்கதரிசனம் சொல்லும் **ஒரு ஸ்திரீ, தன் தலையை சிரைத்துக் கொண்ட ஒரு ஸ்திரீக்கு ஒப்பாயிருக்கிறாள்** என்று சொன்னார். அப்போஸ்தலர் ஒரு தைரியமான பேச்சு உருவத்தை பயன்படுத்திக் கொண்டிருந்தார். ஒரு ஸ்திரீக்கு சிரைக்கப்பட்ட ஒரு தலையானது அவமானத்திற் குரியதாக இருந்தது; ஆனால் இங்கு பவுல் வேசிகளைக் குறித்து சொல்லவில்லை, மற்றும் கொரிந்துவில் விபச்சாரிகள் தலையை சிரைத்தார்கள் என்ற எந்த ஒரு ஆதாரமும் இல்லை.[13] David E. Garland கூறினார், “ஸ்திரீகளின் சிரைக்கப்பட்ட தலையானது இயற்கையின் மறைவை எடுத்துவிடும் ஒரு இயற்கைக்கு மாறான நிலைமையாக இருக்கிறது, மற்றும் விவாதம் இன்னும் வலுவாக கலாச்சாரத்தில் அவமானத்தை குறிப்பிடுகிறது.”[14] *ஒரு ஆண் முக்காடு போட்டுக்கொள்ள கூடாது ஆனால் ஸ்திரீயானவள் முக்காடிட வேண்டும் என்று மட்டுமே பவுல் சொன்னார்.*

**வசனம் 6.** சிரைக்கப்பட்ட தலையோடு பொது இடங்களில் தோன்றிய கொரிந்து பெண்களுக்கு பொது இடத்தில் அசட்டைப் பண்ணப்படுவதை வலியுறுத்தின வர்ணனையாளர்கள் தேவை இல்லாமல் திசைதிருப்பபட்டிருக்கிறார்கள். பவுல் முடியின் நீளத்தையோ அல்லது சிகை அலங்காரத்தை குறித்தோ உரையாற்றிக் கொண்டிருக்கவில்லை. ஆண்கள் மற்றும் பெண்களின் முடி நீளம் என்ற விஷயம் ஒரு எடுத்துக்காட்டு மட்டுமே, இதுவே முக்கிய குறிப்பல்ல. **ஒரு ஸ்திரீ முக்காடிடாமல் இருந்தால்**, அவள் தன் தலை மயிரை சிரைக்க வேண்டும் என்ற தன்னுடைய ஆலோசனைக்கு ஆதரவு தந்த யாதொரு விவாதத்திற்கும் அப்போஸ்தலர் முறையீடு செய்தார். நீளமான கூந்தல் ஆண்களுக்கு கனவீனமாகவும் ஸ்திரீகளுக்கு மகிமையாக இருந்தபடியால் (11:14, 15), முக்காடிடுவது ஒரு ஸ்திரீயின் கனத்தை பெருகிற்று ஆனால் புருஷருக்கான கனத்தை குறைத்தது. ஒரு வேளை பவுலின் விவாதம், இந்த நாளில் அநேகருக்கு குழப்பும்படியாக இருந்தாலும், அது யூத மற்றும் புறஜாதி பின்னணியின் கொரிந்து கிறிஸ்தவர்களுக்கு அர்த்தமுள்ளதாக இருந்தது. காரணம், அது அவர்களுடைய வாழ்க்கை அனுபவத்திலிருந்து எடுக்கப்பட்டது.

புருஷர்கள் மற்றும் ஸ்திரீகள் தங்கள் உறவில் எவ்வாறு நன்னடத்தையோடு இருக்க வேண்டும் என்று வேறுபாடு செய்யும் சமுதாய் விதி முறைகளை குறித்ததான கேள்வி நிலவியிருந்தது. ஸ்திரீயின் கூந்தலின் நீளம் எந்த விளைவும் ஏற்படுத்தவில்லை. ஒரு சமுதாய விதிமுறைகள் ஒழக்கமற்றதாக மற்றும் மதசார்பற்றதாக இல்லாமல் இருக்குமளவும் கிறிஸ்தவர்கள் சமுதாய விதி முறையில்

வாழ வேண்டும் என்று வசனம் குறிப்பிடுகிறது. கொரிந்துவில், சிரைக்கப்பட்ட மற்றும் முக்காடிடாத தலை இரண்டுமே புருஷர்கள் மற்றும் ஸ்திரீகள் இடையிலான சமுதாய வேறுபாட்டை கனவீனப் படுத்துகிறதாக இருந்தது.

**வசனம் 7.** ஸ்திரீகள் முக்காடு போட வேண்டும் மற்றும் புருஷர்கள் போடக்கூடாது என்ற சமுதாய விதிமுறைகளைக் காட்ட முற்பட்ட பிறகு அப்போஸ்தலர் வெளிப்படுத்தலுக்கு விசேஷம் 11:7க்கு திரும்புகிறார். அவர் 11:3ல் குறிப்பிட்டதை இன்னுமாக வளரச் செய்தார். ஒவ்வொரு புருஷனுக்கும் கிறிஸ்து தலையாயிருக்கிறார், ஸ்திரீக்கு புருஷன் தலையாயிருக்கிறான், மற்றும் கிறிஸ்துவுக்கு தேவன் தலையாயிருக்கிறார். ஒரு புருஷன் தான் ஜெபிக்கும்போது அல்லது தீர்க்கதரிசனம் சொல்லும்போது முக்காடு போட்டால், அவன் தேவனை கனவீனப்படுத்துவான். சிருஷ்டிப்பில், தேவன் மனிதனை தன்னுடைய சாயலாகவே சிருஷ்டித்தார் (ஆதி. 1:26). இந்த சிருஷ்டிப்பின் கிரியை தேவனோடு மனிதனின் உறவை விவரித்தது. பின்பு, தேவன் ஸ்திரீயை சிருஷ்டித்தார். சிருஷ்டிப்பின் கிரமத்திலிருந்து, புருஷன் மற்றும் ஸ்திரீ ஒருவரோடொருவர் உள்ளார்ந்த உறவை சுமக்கிறார்கள் என்று பவுல் விவாதித்தார். முக்காடிட்டுக் கொள்ளுவது தேவனுடைய ஸ்தானத்தில் அமைக்கப்பட்ட அவரவர்களின் பாத்திரத்தின் ஒரு அடையாளமாக இருந்தது. இதே வாஸ்தவத்தை சம்பாஷிக்க மற்ற அறிகுறிகளையும் பயன்படுத்தியிருக்கலாம்.

"புருஷன் தேவனுடைய மகிமை," என்று பவுல் சொன்னபோது, அவனுடைய மானசீகம், மாமிசம், மற்றும் ஆவிக்குரிய தன்மை தேவனுடைய மகிமையை பிரதிபலித்தது என்பதே பவுலின் பொருளாக இருந்தது. எதிர்மறையாக, ஸ்திரீயானவள் தன் கணவனின் மகிமையை பிரதிபலிக்கிறாள். அப்போஸ்தலர் அதோடு நிறுத்தி விட்டார். ஒரு ஸ்திரீ, தன்னுடைய பாலினத்தின் அடிப்படையில் தேவனோடு கூட அதிகமான அல்லது குறைந்த ஸ்தானத்தை அல்லது தயையை பெற்றிருக்கிறாள் என்று சொல்லவில்லை.

**வசனங்கள் 8, 9**. ஆங்கில வேதாகமத்தில் For (γάρ, *gar*) என்ற விவரணையிலிருந்து தொடங்கி, ஸ்திரீயானவள் புருஷனின் மகிமையாக இருக்கிறாள் (11:7) என்று ஆதாரங்களை காட்ட முன்னேறுகிறார். ஆதியாகமத்தில் இருக்கும் தகவல் புருஷனின் முன்னுரிமையை காட்டுகிறது. தேவன் முதலில் மனிதனை உண்டாக்கி பிறகு ஸ்திரீயை அவனுக்கு ஏற்ற துணையாக சிருஷ்டித்தார் (ஆதி. 2:7, 22). சிருஷ்டிப்பின் வரிசை முறையில், புருஷன் ஸ்திரீக்கு வாழ்வின் ஆதாரமாக இருந்தான். கொரிந்துவில் சமுதாய விதிமுறைகளின் மரபுகளின்படி முக்காடுப் போடுவது தேவனுடைய சிருஷ்டிப்பில் புருஷனின் முன்னுரிமையின் ஒரு அடையாளம் என்று

நியாயபடுத்தினார்.

தன்னுடைய ஆதியாகமத்தின் முறையீட்டை தொடர்ந்து, பவுல் 11:9ல் முக்காடிடுவது, தேவன் தன்னுடைய சிருஷ்டிப்பின் நேரத்தில் முன்வைத்த கிரமம் மற்றும் நோக்கத்தின் அடையாளமாக இருக்கிறது என்று விவரிக்கிறார். மனிதனுக்கு ஒரு ஏற்ற துணை வேண்டும் என்பதற்காகவே ஸ்திரீயானவள் சிருஷ்டிக்கப்பட்டாள், அதற்கு நேர்மாறாக அல்ல. பவுல் சொன்னபடி, **புருஷன் ஸ்திரீக்காக சிருஷ்டிக்கப்பட்டவனல்ல, ஸ்திரீயே புருஷனுக்காக சிருஷ்டிக்கப்பட்டவள்.** தேவன் புருஷன் மற்றும் ஸ்திரீயை ஒரே சமயத்தில் சிருஷ்டிக்கவில்லை, அல்லது ஸ்திரீயை முதலில் சிருஷ்டிக்கவில்லை. சிருஷ்டிப்பின் கிரமம் புருஷர்கள் மற்றும் ஸ்திரீகளுக்கு இடையே உள்ள ஒரு உறவை அறிக்கையிட்டது. அந்த காரணத்தை கொண்டு, ஆண்கள் மற்றும் பெண்கள் பொது அமைப்பில் வரும்போது சமுதாய வேறுபாட்டை பராமரிப்பது சரியானதாக இருக்கிறது. புருஷன் தன் தலையை மூடிக் கொள்ளுவது (11:7) அல்லது ஸ்திரீயானவள் தன் தலையை மூடிக் கொள்ளாமல் இருக்கிறது (11:6) என்பது தேவன் அதினதின் ஸ்தானத்தில் வைத்திருப்பதை கவனிக்கத் தவறுவதாகும்.

**வசனம் 10. ஆகையால்** (διὰ τοῦτο, *dia touto*, இலக்கியரீதியாக “இக்காரணத்தைக் கொண்டு”) என்று பவுல் சொல்லும்போது, சிருஷ்டிப்பின் பின்னணி-களின் அடிப்படைகளிலிருந்து அப்பொழுதுதானே அவர் செய்திருந்த முறையீடுகளிலிருந்து அவருடைய முடிவு பின்தொடர்ந்து வந்தது என்று வெளிப்படை-யாகவே சுட்டிக்காட்டிக் கொண்டிருந்தார். இன்னுமாக, அவர் ஆதியாகமத்திலிருந்து ஈர்த்த அம்சங்கள், புருஷனுக்கு மனைவி கீழ்ப்படிவதை குறித்து கவனம் செலுத்தவில்லை. இரண்டு பேருக்கும் இடையில்; அதாவது ஸ்திரீயானவள் ஜெபிக்கும்போது அல்லது தீர்க்கதரிசனம் சொல்லும்போது முக்காடிட வேண்டும் மற்றும் புருஷன் தலையை மூடிக்கொள்ளக் கூடாது என்ற வழக்கமான சமுதாய வேறுபாட்டிற்கு ஒரு நியாயப்படுத்தலாக தோன்றுகிறது. இங்கு, அவருடைய முக்காடிட்டுக்கொள்ளும் சர்ச்சையில் முதல் முறையாக, அப்போஸ்தலர் “அதிகாரம்” (ἐξουσία, *exousia*) என்ற வார்த்தையை உபயோகிக்கிறார். NASB சொல்லுகிறது, **ஸ்திரீயானவளுக்கு அவள் தலை மீது அதிகாரத்தின்** “சின்னம்” இருக்க வேண்டும். NASBல் இருக்கும் italics (சாய்வு சொற்கள்) புறக்கணிக்கப்படக் கூடாது; “சின்னம்” (“a symbol of”) என்ற வார்த்தைகள் மொழிபெயர்ப்பாளர்களிலிருந்து கொடுக்கப் பட்டது. NIV1984 (“a sign of authority”) “அதிகாரத்தின் சின்னம் என்று கொண்டுள்ளது.” RSV கிரேக்க வார்த்தையின் தரமில்லாத வாசக சான்றை கைக்கொண்டுள்ளது: “… ஒரு ஸ்திரீயானவள் தன் தலையின் மீது

முக்காடு போட வேண்டும்."

இந்த வசனப் பகுதியை படிக்கும் ஒரு வழியானது, முக்காட்டை "அதிகாரத்தின்" சின்னமாக புரிந்துக் கொள்ளவேண்டும், குறிப்பாக, புருஷரின் "அதிகாரம்." இந்த வசனத்தை விளக்க மற்றொரு வழி ஒரு ஸ்திரீயானவள் முக்காடிடுவது அவள் ஜெபிக்க மற்றும் தீர்க்கதரிசனம் சொல்ல அவளுடைய அதிகாரத்தின் அல்லது அவள் மீது அவளுக்கு இருக்கும் அதிகாரத்தின் சின்னமாக இருக்கிறது. மனிதனின் சிருஷ்டிப்பின் முன்னுரிமைக்கு பவுலின் முறையீடு (11:8, 9) மற்றும் கீழ்க்கண்ட வசனங்களில் (11:11, 12) "அதிகாரத்தின்" மென்மையாகுதல் முந்தின வியாக்கியானத்தை ஆதரிக்கிறது.

இந்த வசனப் பகுதியை வாசிக்க, "ஆதலால் ஒரு ஸ்திரீக்கு தன் [சொந்த] தலையின் மீது அதிகாரம் உடையவளாக இருக்க வேண்டும்" என்பது இது வரைக்கும் எந்த ஒரு அர்த்தத்தை கொடுத்ததோ அதை விட முற்றிலும் வித்தியாசமான சின்னத்தின் மதிப்பை முக்காடு குறிக்கிறது என்று அறிந்துகொள்ள வேண்டி இருக்கிறது. முக்காட்டை ஒரு புருஷனின் முன்னுரிமையின் சின்னமாக பாராமல், அது ஒரு ஸ்திரீயின் சுய உறுதிக்கு ஒரு அதிகாரமாகிறது. விளக்கம் இல்லாமல், இத்தகைய பொருளடக்கத்தின் தீவிர மாற்றம் என்பது சாத்தியமற்றதாக இருக்கும்.

11:10ல் அப்போஸ்தலனின் "அதிகாரம்" என்ற வார்த்தை வழக்கத்திற்கு மாறாக இருக்கிறது. சாதாரணமாக, "அதிகாரம்" ஒருசுறுசுறுப்பான அர்த்தத்தில், ஒன்றை செய்ய அதிகாரம் உள்ள காரியத்தை உள்ளடக்கி, பயன்படுத்தப்பட்டிருக்கிறது. ஆகிலும், வசனம் 10க்கு மற்றும் அதற்கு முன் வரும் அல்லது அதற்கு பின் வரும் இரண்டு வசனங்களுக்கு இடையில் ஏதாவது சம்மந்தம் இருக்குமேயானால், எப்படி ஸ்திரீக்கு தன் சொந்த தலையின் மீது "அதிகாரம்" உள்ளது என்று புரிந்து கொள்ளுவது கடினமாக இருக்கும். சிருஷ்டிப்பின் கிரமமானது புருஷனோடு முன்னுரி மையை நிரூபிக்கிறது, அவனுடைய அதிகாரத்தை அல்ல என்று யாராகிலும் சொல்லலாம்; ஆனால் வார்த்தை அறிமுகமானதும், ஸ்திரீக்கு தன் சொந்த தலை மீது அதிகாரம் உள்ளது என்று பவுல் ஆதியாகமத்தை சுட்டிக்காட்டினான் என்று வாசகன் விரைவில் முடிவெடுக்க முடியாது. புருஷர்கள் மற்றும் ஸ்திரீகள் சரிசமம் என்ற நவீன காலத்தின் உணர்திறன் அத்தகைய வியாக்கியானத்திற்கு ஒரு உந்து சக்தியாக இருக்கிறது ஆனால் பவுல் மற்றும் அவனுடைய வாசகர்கள் புரிந்துகொண்ட அர்த்தத்தில் அல்ல என்ற சந்தேகம் ஒரு சிலருக்கு உண்டு.

வசனத்தின் சந்தர்ப்பத்திற்கு ஒரு செயலற்ற அர்த்தம் தேவையானபடியால், அநேக மொழியாக்கம் NASB போலஉள்ளது: "... ஸ்திரீயானவளுக்கு தன் தலை மீது அதிகாரத்தின் சின்னம் இருக்க

வேண்டும்." புருஷனுக்கு ஸ்திரீ மீது எந்த ஒரு "அதிகாரம்" இருந்தது அல்லது அதை எப்படியாக கைக்கொள்ள வேண்டும் என்ற பவுலின் கவலை இல்லை. புருஷர்கள் நல்லொழுக்கத்தில் அல்லது ஸ்திரீகளை விட சிறந்தவர்கள் என்று அவர் சொல்லவில்லை. ஆவியானவரால் தெய்வீகமாக பலப்படுத்தபட்ட ஸ்திரீகளை குறித்து பவுல் பேசிக் கொண்டிருந்தார் என்பதை வாசகர்கள் தங்கள் மனதில் வைக்க வேண்டும். ஆதலால் ஆவியானவரின் ஏவுதலின் படியே அவர்கள் ஜெபிக்க வேண்டும் மற்றும் தீர்க்கதரிசனம் உரைக்க வேண்டும், ஆனாலும் அவர்கள் முக்காடிட்டு, ஆண்கள் மற்றும் பெண்கள் நடுவில் உள்ள சமுதாய வேறுபாட்டை தாங்கள் அங்கீகரித்திருப்பதைக் காட்ட வேண்டி இருந்தது.

**தூதர்களினிமித்தம்** என்று பவுல் சேர்க்கும் போது, அவர் வெளிப்படையாகவே சபை ஆராதனையை பரீட்சைப்பார்க்க வரும் தேவனின் தூதர்கள் அல்லது பிரநிதிகளைக் குறித்தார். இன்னும் தெளிவாக சொல்லுவது கூடாத காரியம். பவுல் சில சமயங்களில் துஷ்ட ஆவிக்குரிய வல்லமைகளைக் குறித்துக் கூறும்போது, அவர் அவைகளை "தூதர்கள்" என்று அழைக்கவில்லை. அநேக நேரங்களில், அவர் ஒரு தூதனை ஒரு துஷ்ட தூதுவன், "சாத்தானுடைய தூதன்" என்று குறிப்பிட்டுள்ளார் (2 கொரி. 12:7), அல்லது சந்தேகத்துக்கு இடமளிக்கும் வகையில் "தேவ தூதர்களுக்குச் செய்யும் ஆராதனை" (கொலோ. 2:18) என்று குறிப்பிட்டிருந்தார். வசன சூழலுக்கு தேவைப்பட்டாலே ஒழிய, வாசகர்கள் "தூதர்களை" இரக்கமுள்ள தேவனுடைய பிரநிதிகள் என்று புரிந்துக் கொள்ள வேண்டும் (காண்க 1 கொரி. 4:9; 6:3).

**வசனம் 11.** ஸ்திரீகளுக்கு கிடைக்காத புருஷரின் ஆவிக்குரிய அந்தஸ்தை குறித்து வாக்குவாதம் செய்வதற்காகவே சிருஷ்டிப்பில் மனிதனின் முன்னுரிமையை பயன்படுத்த ஒரு சில புருஷர்கள் நினைத்தார்கள். பவுல் அதை அனுமதிக்கவில்லை. புருஷர்கள் மற்றும் ஸ்திரீகள், தேவனுடைய மகிமைக்காக ஜீவிக்கையில் ஒருவரையொருவர் நிறைவுப்படுத்துகின்றன. **கர்த்தருக்குள் ஸ்திரீயில்லாமல் புருஷனுமில்லை, புருஷனில்லாமல் ஸ்திரீயுமில்லை** என்று பவுல் சொன்னார். இருவரும் பாவத்தில் விழுந்து போயிருக்கிறார்கள்; இருவரும் தேவ கிருபையால் இரட்சிக்கப்பட்டிருக்கிறார்கள். கிறிஸ்தவர்கள் சமுதாய வழக்கங்களை கனப்படுத்த வேண்டும் என்பதே அப்போஸ்தலனின் பாரமாக இருந்தது. தன் மனைவியை ஆளும் மற்றும் பிள்ளைகளை ஆணவமாக நடத்துவதை குறித்து அவர் ஒன்றும் சொல்லவில்லை.

**வசனம் 12.** ஆதியில், ஸ்திரீயானவள் புருஷனிலிருந்து தோன்றுகிறதுபோல, ஆனால் இயற்கை ஜனத்தில், **புருஷனும் ஸ்திரீயினால் தோன்றுகிறான்**. எந்த பாலினரும் ஒருவரையொருவர்

அலட்சியத்தோடு காண காரணம் இல்லை. தேவனுக்கு முன் எல்லோரும் சரி சமானமாக இருக்கிறார்கள். Garland இவ்வாறு கூறினார்: "ஸ்திரீ மற்றும் புருஷன் ஒருவரை ஒருவர் சார்ந்திருப்பது, 12:21ல் சொல்லப்பட்டதுக்கு ஒப்பாக துணை நிற்றல் நடத்தும்" கண்ணானது கையைப் பார்த்து: "நீ எனக்கு வேண்டுவதில்லை என்று சொல்லக் கூடாதே."[15]

**வசனம் 13.** கொரிந்தியர் சமுதாய விதிமுறை-களை தாங்களாகவே நிதானித்து பார்க்கும்படியான கோரிக்கையை பவுல் விடுகிறார் (காண்க 10:15). ஒரு ஸ்திரீயானவள், ஜெபிக்கும்போது "முக்காடு" (ἀκατακάλυπτον, *akatakalupton*) போடாமல் இருக்கக் கூடாது என்ற கொரிந்திய சமுதாய வழக்கம் இருந்தது. சகோதரர்கள் தாங்களே நியாயந்தீர்த்துக் கொள்ளக்கூடும்: ஒரு ஸ்திரீக்குத் தேவையான முக்காடு பிரத்தியட்சமாக இருந்தது.

புருஷர்கள் இல்லாமல், ஒரு கூட்ட ஸ்திரீகளை சேர்க்க வேண்டுமானால், ஒருவருக்கு தன் ஜனங்களை அவ்வாறு உபசரிக்கும்படி தன்னை துறக்க வேண்டும் என்று பவுல் நினைத்திருந்தார். ஒரு பொது ஆராதனையில் புருஷர்கள் மற்றும் ஸ்திரீகள் கூடி வரும்போது, முக்காடிடாமல் ஜெபிக்கும்போது, அந்த கொரிந்து ஸ்திரீயானவள் தான் வாழ்ந்து வந்த கலாச்சாரத்தின்படி, சொந்தக்காரருக்கு அவள் கனவீனப்படுத்துகிறவளாக இருந்தாள்.

**ஸ்திரீயானவள் தேவனை நோக்கி ஜெபம் பண்ணுகையில், தன் தலையை மூடிக்கொள்ளாமலிருக்கிறது** இலட்சணமாயிருக்குமோ? என்று பவுல் கேட்கிறார். முக்காடிடுவது ஒழக்கமாக இருந்தது. அந்த ஒரு கலாச்சாரத்தில், புருஷர்கள் மற்றும் ஸ்திரீகள் பொது இடத்தில் கூடும்போது, அவர்களிடமிருந்து ஒரு குறிப்பிட்ட தூரத்தை பராமரிப்பது அவளுடைய தகுதிக்கு சாட்சியாக இருந்தது. பவுல் சொன்னது எல்லாமே, ஸ்திரீகளுக்கு மட்டுமே என்று அவர் சொல்லவில்லை. புருஷர்கள் முக்காடிட்டு ஜெபிப்பது மற்றும் தீர்க்கதரிசனம் சொல்லுவதின் முறையற்ற காரியமும் பின்னணியில் இருந்தது.

**வசனங்கள் 14, 15.** ஒரு புருஷனுக்கு நீளமான தலைமயிர் கனவீனமாக இருக்கும் என்று **சுபாவமே எப்படியாக** போதிக்கும்? ஸ்திரீகள் கூந்தல் வளரு-மட்டும் புருஷரின் கூந்தலும் வளரும் என்பது தெளிவானது. பவுல் "சுபாவ"த்தைப் பற்றி போதிக்கும்படி புரிந்து கொண்ட ஒரு வழி மரபுகளை கொண்டு ஒப்புக் கொண்டதின் முகாந்திரமே. அவருடைய பார்வையில், தகுதியின் மண்டலத்திற்குள் இருந்து யாவுமே சுபாவத்தின் போதனையாக இருந்தது (11:13); யாதொரு ஒழுக்கமற்ற அல்லது சமுதாயம் அங்கிகரீக்காத பழக்கங்களுமே சுபாவத்திற்கு எதிரானது. ஒரு சில நிகழ்வுகளில், தகுதியை விட ஸ்தம்பித்திருந்தது. உதாரணமாக, ரோமர் 1:26ல்,

அப்போஸ்தலன், தேவனுடைய சத்தியம் மற்றும் பெண்கள் "சுபாவ அனுபோகத்தை சுபாவத்துக்கு விரோதமான அனுபோகமாக மாற்றினார்கள்" என்று கூறுகிறார். "சுபாவமே" ஒழுக்கத்தின் போதகராக இருந்தது, மற்றும் பவுல் நீடித்திருந்த சமுதாய பழக்கத்தை ஆதரிக்கும்படி சுபாவத்திற்கு முறையிடுகிறார். அந்த காலத்து கொரிந்து சமுதாயத்தில், கொரிந்தியரை பொறுத்தவரை, அவர்களுடைய அனுபவத்திற்கு எதிராக இருந்த படியால், ஒரு புருஷன் நீளமான கூந்தலோடு இருப்பது அவனுக்கு கனவீனமாக இருந்தது. அத்தகைய பழக்கம் சுபாவத்தின் போதனைக்கு விரோதமாக இருந்தது, அப்போஸ்தலன் ஒரு புருஷன் முக்காடிட்டு ஜெபிப்பது அல்லது தீர்க்கதரிசனம் சொல்லுவது ஒழுக்கமற்றது என்று தன் வாக்குவாதத்தை வலுப்படுத்த இந்த ஒரு பழக்கத்தை பயன்படுத்தினார். பவுல், புருஷர்கள் அல்லது ஸ்திரீகளுக்கு நீளமான கூந்தலின் மரியாதையை குறித்த புதிய ஒரு விஷயத்தை திடீரென்று எடுக்கவில்லை. அதைவிட, அவர் புருஷருக்கு சிறிய கூந்தல் மற்றும் ஸ்திரீகளுக்கு நீளமான கூந்தல் ஒரு குணாதிசயமாக இருக்கிறது என்று கருதி, அவர் முக்காடிடும் அல்லது ஸ்திரீகள் தலையை மூடிக் கொள்ளும் நிதர்சனத்தை பயன்படுத்தினார்.

புருஷருக்கு **நீளமான கூந்தல் கனவீனமாக இருக்கிறது** என்னும் சொல் ஒரு வரலாற்று ஆர்வமாக இருக்கிறது. Spartan போர்வீரர்கள் தங்கள் நீளமான கூந்தலுக்காக பறைசாற்றப் பட்டார்கள்; அவர்களுடைய பழக்கம் பழங்காலத்தவரால் ஆர்வம் ஈர்க்கப்பட்டது ஏனெனில், அது அவர்களுடைய விதி முறைகளுக்கு நேர்மாறாக இருந்தது.[16] சாதாரணமாக, கிரேக்க மற்றும் ரோம புருஷர்கள் தங்கள் கூந்தலை சிறியதாக வைத்திருந்தார்கள்; ஸ்திரீகள் நீளமாக வைத்திருந்தார்கள். பவுல் புருஷர்கள் மற்றும் ஸ்திரீகள் பொது இடத்தில் ஜெபிக்கும்போது முக்காடிடுவதை குறித்த தன்னுடைய போதனைக்கு ஆதரவாக இந்த பழக்கத்தை பயன்படுத்தினார். அத்தோடுகூட, **தலைமயிர் அவளுக்கு முக்காடாகக் கொடுக்கப்பட்டிருக்கிறதே** (11:15) என்று அவர் சொன்னார். புருஷர்கள் அல்லது ஸ்திரீகளின் நீளமான அல்லது குட்டையான கூந்தல் மரபணு அலங்காரத்திற்கு சாதகமாக இருக்கும் என்று அப்போஸ்தலன் வாக்குவாதம் செய்யவில்லை.

**வசனம் 16**. பவுல் முக்காடிடுவது மற்றும் சமுதாய ஆராதனையில் அதனுடைய தாக்கங்கள் குறித்த தன் சர்ச்சையை கொரிந்தியரைப் புகழ்ந்து தன் சர்ச்சையைத் தொடங்குகிறார் (11:2). பவுல் பாராட்டின பழக்கங்களை எல்லாம் சபை பின் பற்றியிருக்ககூடும். கிறிஸ்தவ கூட்டத்தில் புருஷர்களுக்கு முக்காடிடாமல் ஆராதிக்க வசதியாக இல்லாததினாலே கேள்விகள் எழும்பியிருக்கலாம். புறஜாதியாராக இருந்தபொழுது, அவர்கள் ரோம தேவர்களுக்கு ஆராதனை

செலுத்தும்போது, முக்காடிட்டிருந்தார்கள். ஆராதனை கூட்டத்தில் புருஷர்களுக்கு முக்காடிடுவது தேவையற்றதாக இருந்ததால், அவர்களுக்கும் அது தேவையற்றது என்று ஸ்திரீகள் நினைத்திருக்கலாம். பவுலின் வார்த்தைகள் சபையின் பழக்கத்தை வலுப்படுத்தினது மற்றும் கிறிஸ்தவர்கள் தாங்கள் செய்து கொண்டிருந்ததையே செய்யும்படி ஊக்குவித்தார்.

அப்போஸ்தலன் மற்றுமோர் விமர்சனத்தை சேர்த்தார். கொரிந்து சபையில் சமாதானம் வலுவாக இருக்கவில்லை. ஆராதனையில் யாராகிலும் புருஷர்கள் மற்றும் ஸ்திரீகளின் தனித்துவமான பாத்திரத்தை புறகணித்ததால், அவர்கள் அப்போஸ்தலர் மற்றும் எங்கெங்கும் உள்ள தேவ சபையை எதிர்க்கிறார்கள் என்று சகோதரர்களுக்கு அவர் கூறினார். தனிப்பட்ட கிறிஸ்தவர்களுக்கு மற்றும் தனிப்பட்ட சபைகளுக்கு வரலாறின் மற்றும் அவர்கள் சுற்றிலும் இருந்த விரிவான சமுதாயத்தின் ஸ்திரப்பட்ட ஏவுதல் தேவையாக இருந்தது. ஒரு இணங்குகிற சபையில், ஒரு சண்டையிடுகிற (φιλόνεικος, *philoneikos*) ஒரு நபர் துயரமான விளைவுக்கு கொண்டு போகலாம். ஆதலால், 11:16ல் பவுல் கொரிந்தியருக்கு, அவர் முக்காடிடுவதை குறித்து என்ன சொல்லியிருந்தாரோ, எல்லா ஸ்தலங்களிலும் தேவனுடைய சபைகளில் அதே பழக்கங்கள் பிரதிபலித்தது என்று சொன்னார். கொரிந்துவில் அல்லது வேறெங்கிலும், எந்த ஒரு நபரோ தெய்வீகமாக அங்கீகரிக்கப்பட்ட முன்னுதாரணங்களுக்கு எதிராக நிற்கக்கூடாது (காண்க 7:17).

கொரிந்துவில், சமுதாய பழக்கம் சொன்னது போல, முக்காடிடும் காரியம், சபையில் புருஷர் மற்றும் ஸ்தீரியின் உறவை பிரதிபலித்தது. ஆகிலும், சபையில் வேற்றுமையின் வேறு சில காரியங்களும் வெளிப்படையாக இருந்தது. சிலர் வேறு சிலரை விட செல்வந்தர்களாக இருந்தார்கள்; மற்றும் சிலர் கிரேக்கர் மற்றும் ரோமராக இருக்கையில், சிலர் யூதர்களாக இருந்தார்கள். உயர்ந்த அந்தஸ்தில் இருந்தவர்கள், கலாச்சாரத்தின் சமுதாய வேறு-பாட்டை கிறிஸ்தவ சபைகளில் தங்களோடு கொண்டிருந்தார்கள்.

சபை ஐக்கிய போஜனத்தில் கலந்து கொள்ளும் போது அந்தஸ்தின் வேறுபாடு வெளிப்பட்டது. கிறிஸ்துவுக்குள், பணக்காரன் மற்றும் ஏழை, அடிமை மற்றும் சுயாதீனன், அல்லது யூதன் மற்றும் புறஜாதியான் (கிரேக்க; கலா. 3:28) என்ற வேறுபாடு இருக்கக்கூடாது. ஒரு பகிர்ந்துகொண்ட உணவு, சமுதாய உணர்வு மற்றும் கிறிஸ்துவுக்குள் ஒருமனதை குறிக்கும் ஒரு நேரத்திற்காகவே இருந்தது, ஆனால் உயர் அந்தஸ்தில் இருந்தவர்கள் கீழ் அந்தஸ்தில் இருந்தவர்களோடு ஐக்கியங்கொள்ள தயங்கினார்கள். அவர் களுடைய போஜனம் ஏழைகள் பெற முடியாத பகட்டான உணவாக இருந்தது.

பவுல் இந்த பிரச்சனைக்கு ஒரு தீர்வைத் தேடினார். Garland இப்படியாக விமர்சித்தார்,

> கொரிந்து சபையில் இருந்த பிரச்சனைகளில் ஒன்று, அது ரோம கலாச்சாரத்தால் ஊக்குவிக்கப்பட்டிருந்தது மற்றும் அது சிலுவையின் ஞானத்தோடு மோதியது ... ஒரு காரியத்தில் பவுல் நோக்கமாயிருந்தார்: கிரேக்க-ரோம மரபுகளின் விஷம் நிறைந்த மண்ணிலிருந்து கொரிந்து உணவை வேரோடு தகர்க்க வேண்டும் மற்றும் மற்றவர்களுக்கான கிறிஸ்துவின் அன்பின் தியாகத்தின் போஷாக்களிக்கும் மண்ணினாலே மறுபடி நட வேண்டும்.[17]

சபை ஒன்று கூடி வருவதற்கு பதிலாக அது ஒரு பிரிவினை மற்றும் சண்டைக்கு மூலமாக மாறியது. அதற்கு, பவுலிடம் புகழ வார்த்தை இல்லாமல் போனது.

## மார்க்கப்பேதங்களின் அவமானம் (11:17-22)

**[17]உங்களைப் புகழாமல் இதைக்குறித்து உங்களுக்குக் கட்டளைகொடுக்கிறேன்; நீங்கள் கூடி வருதல் நன்மைக்கேது வாயிராமல், தீமைக்கேதுவாயிருக்கிறதே. [18]முதலாவது, நீங்கள் சபையிலே கூடிவந்திருக்கும்போது, உங்களில் பிரிவினைகள் உண்டென்று கேள்விப்படுகிறேன், அதில் சிலவற்றை நம்புகிறேன்.**
**[19]உங்களில் உத்தமர்கள் இன்னாரென்று வெளியாகும்படிக்கு மார்க்க பேதங்களும் உங்களுக்குள்ளே உண்டாயிருக்க வேண்டியதே. [20]நீங்கள் ஓரிடத்தில் கூடிவரும் போது, அவனவன் தன்தன் சொந்த போஜனத்தை முந்திச் சாப்பிடுகிறான்; ஒருவன் பசியாயிருக்கிறான், ஒருவன் வெறியாயிருக்கிறான். [21]இப்படிச் செய்கிறது கர்த்தருடைய இராப்போஜனம் பண்ணுதல்லவே. [22]புசிக்கிறதற்கும் குடிக்கிறதற்கும் உங்களுக்கு வீடுகள் இல்லையா? தேவனுடைய சபையை அசட்டைபண்ணி இல்லாதவர் களை வெட்கப்படுத்துகிறீர்களா? உங்களுக்கு நான் என்ன சொல்லுவேன்? இதைக்குறித்து உங்களைப் புகழ்வேனோ? புகழேன்.**

**வசனம் 17.** இந்த வசனத்தின் சந்தர்ப்ப சூழலில், ஆங்கில வேதாகமத்தில் But (δέ, *de*) என்ற இணைப்பில் எதிர்ப்பு அல்லது விரோதத்தைக் காட்டும் எதிர்ப்புள்ள காரியம் உள்ளது. பவுல் முக்காடிடுவதைப் பற்றிய விஷயத்தை விட்டபடியால், வாசகர்கள் கடுமையான வார்த்தையை எதிர்ப்பார்த்திருக்கக் கூடும். சபை கூடி வரும்போது ("நீங்கள் கூடிவருதல் [συνέρχεσθε, *sunerchesthe*]"), முக்காடிடுவது மற்றும் உணவு பகிர்ந்து கொள்ளுதல், இரண்டு பழக்கமுமே அந்த குறிப்பிட்ட காலகட்டத்தில் சம்மந்தப் பட்டிருந்தது. அவர் அவர்களை புகழுவதில்லை ஏனெனில், சபை

கூடுகையில் (συνέρχεσθε, *sunerchesthe*, **கூடி வருகை**-யில்), நன்மைக்கேதுவாயிராமல், தீமைக்கேது-வாயிருக்கிறது என்று அடுத்ததாக சொன்னார். பவுல் நிருபங்களில், இந்த வினையின் வடிவங்கள் 1 கொரிந்தியரில் மட்டுமே வருகிறது: சபை ஒன்று கூடி புசிக்கும் சர்ச்சையில் நான்கு முறை வருகிறது (11:17, 20, 33, 34) மற்றும் அந்நிய பாஷையின் உபயோகம் மற்றும் துர்ப்பிரயோகம் (14:23, 26) பற்றி சகோதரர்களை கடிந்து கொள்ளும்போது இரண்டு முறை பயன்படுத்தினார். கூடுதலாக, அப்போஸ்தலன் ἐν ἐκκλησίᾳ (*en ekklēsia*, "சபையில்") என்ற சொற்றொடர் விசேஷமாக 1 கொரிந்தியரில் (11:18; 14:19, 28, 35) உப-யோகித்தார், இதனுடைய பொருள் "கூடுகையில்" என்றாகும். அதிகப்படியான வசனபாகங்கள் தனிப்பட்ட சபை கூடுகையை உரைக்கிறது அல்லது குறிக்கிறது (அப். 20:7 போல), ஆனால் புதிய ஏற்பாடு, சபை கூடும்போது என்ன செய்தார்கள் என்ற விரிவான விளக்கத்தை கொடுப்பதில்லை.

ஏற்கனவே பவுல் விக்கிரகங்களுக்கு படைத்ததை குறித்து சொல்லும்போது கர்த்தரின் பந்தியை குறித்து சொல்லியிருந்தார் (10:16-22). இங்கு அவர் ஐக்கிய போஜனத்தின் சூழலில் மறுபடியும் அந்த விஷயத்தை அறிமுகப்படுத்துகிறார். எந்த இடத்திலும் கர்த்தரின் பந்தி ஒரு முக்கிய தலைப்பாக இருந்ததில்லை. 10ம் அதிகாரத்தில், அவர் விக்கிரகங்கள் முன் அமர்ந்து விக்கிரகங்களுக்கு படைத்ததை பகிர்ந்துக்கொள்ளும் காரியத்தில் அவர்களை எச்சரித்தபோது இராப்போஜனத்தைக் குறிப்பிட்டார். 11ம் அதிகாரத்தில், அவர் கிறிஸ்துவின் சுயநலமில்லாத தன்மைக்கு, அப்பம் மற்றும் திராட்சரசம் ஒரு அடையாளமாக இருப்பதற்கும் மற்றும் ஐக்கிய போஜனத்தில் வாசகர்களின் சுயநலத்தை வித்தியாசப்படுத்தினார்.

கர்த்தர் இராப்போஜனத்தை தொடங்கினது பற்றிய அப்போஸ்தலனுடைய விமர்சனம், கொரிந்துவில் ஐக்கிய போஜனம் என்று பழக்கத்தில் இருக்கும் காரியம் மேலுக்குமேல் பிரிவினையை கொண்டு வந்தது, ஒருமனதை அல்ல என்று வாதாட பவுல் ஒரு பாகமாக பயன்படுத்தினார்.

**வசனங்கள் 18, 19. கூடி வருகையில்** என்ற கிரியையைத் தொடர்ந்து, பவுல், வாரத்தின் முதலாம் நாளில் ஒரு **சபையாக** (*en ekklēsia*) கூடி வருகிற கிறிஸ்தவர்களை குறிப்பிடுவதை முன்பை விட மிக தெளிவாக சொன்னார் (காண்க அப். 20:7; 1 கொரி. 16:2). அந்த நாள், சீஷர்கள் கர்த்தரின் கல்லறை காலியாக இருந்ததைப் பார்த்த நாளாக இருந்தது (மத். 28:1; மாற்கு 16:2; லூக். 24:1; யோவான் 20:1).

புதிய ஏற்பாட்டில், "[கர்த்தருடைய] கிறிஸ்துவினுடைய நாள்" (2 தெச. 2:2; 2 பேதுரு 3:10; காண்க 1 கொரி. 1:8) என்பது "கர்த்தருடைய நாளு"க்கு வேறுபட்டது (வெளி. 1:10). முதலாவது (ἡ ἡμέρα τοῦ κυρίου, *hē hēmera kuriou*) பழைய ஏற்பாட்டு காலத்தின்

தீர்க்கதரிசி-களிலிருந்து எடுத்துக் கொள்ளப்பட்டது. அது, கர்த்தர் நியாயம் தீர்க்கும்படி இரண்டாவது முறை வரும் இறுதி காலத்தை குறிக்கிறது (காண்க எபி. 9:28; 2 கொரி. 5:10). இன்னொரு பக்கம், “கர்த்தருடைய நாள்” (ἡ κυριακὴ ἡμέρα, *hē kuriakē hēmera*) என்பது கிறிஸ்தவர்கள் கூடி வந்த வாரத்தின் முதலாவது நாளை குறிக்கிறது. இந்த சொற்றொடர் வெளிப்படுத்தின விசேஷம் 1:10ல் மட்டுமே காணப்படுகிறது; ஆனால் அப்போஸ்தலன் அதே “கர்த்தரின்” (κυριακός, *kuriakos*) என்ற பெயரடையை 1 கொரி. 11:20ல் இராப்போஜனத்திற்கும் உபயோகித்தார்.

பவுல், வெவ்வேறு போதகர்களுக்கு குறிப்பாக பவுல் மற்றும் அப்பொல்லோவுக்கு காட்டும் விசுவாசத்தில், பிரிவினைகளை (1:10-15) செய்த காரணத்தினால் கிறிஸ்தவர்களை கடிந்து கொள்ளுதலில் தன்னுடைய நிருபத்தை ஆரம்பித்தார். கொரிந்து சபையில் வேறு சில **பிரிவினைகள்** அந்தஸ்தின் உணர்வால் வளர்ந்திருந்தது. அந்தஸ்தின் வேறுபாடானது பல வகைகளில் தானாகவே வெளிப்பட்டது, ஆனால் சபை ஐக்கிய போஜனத்திற்கு கூடும்போது அது பகிரங்கமாக வெளிப்பட்டது.

11:17-22ல் பவுல் உரைத்த பிரிவினைகள் பகிர்ந்து கொள்ள மறுத்த தனிப்பட்ட சுயநலவாதிகளுக்கும் மேலான தொகையாகவே இருந்தது என்று நிரூபிக்கும்படி Gerd Theissen வலுக்கட்டாயமான ஒரு ஆதாரத்தை கொடுத்தார்.[18] சபை கூடி வரும்படி இடத்தைக் கொடுத்த கிறிஸ்தவர்களிடம் சொத்து மற்றும் உயர்ந்த சமுதாய ஸ்தானம் இருந்தது. அவர்கள் உண்ணும்போது, அவர்கள் சபையிலிருந்த கீழ் வர்க்கத்து ஜனங்களை விட்டு வேறுபட்டார்கள். அவர்கள் விரும்பின நேரத்தில் சாப்பிட்டார்கள் மற்றும் அவர்கள் விருப்பப்பட்ட முதல்தரமான உணவை அருந்தினார்கள். உயர்ந்த கலாச்சாரத்தில் ஏனோதானோ என்று எடுத்துக் கொண்ட வர்க்க வேறுபாட்டை சபை தழுவினது, ஆனால் கர்த்தர் கிருபையால் மீட்கப்பட்டவர்களோடுள்ள ஐக்கியத்தில் விஷமாக இருந்தார்கள்.

கொரிந்துவில், சமுதாய பிரிவினைக்கு அமைப்பை தொகுத்த ஐக்கிய போஜனம் கர்த்தரின் இராப்போஜனத்திற்கு ஈடாகாது. கடைப்பிடித்தலுக்கு மாறுபட்டு, கொரிந்து சபையின் விசுவாசிகள் ஒரு சமுதாய உணவை கர்த்தரின் பந்திக்கு முன் அல்லது பின்பாக எடுத்துக் கொண்டார்கள்.[19] இந்த ஐக்கிய உணவின் எண்ணம் ஐக்கியத்தை வளர்ப்பதற்காகவே இருந்தது, ஆனால் பிரிவினையின் ஒரு சின்னமாக மாறினது. பணக்காரன் மற்றும் ஏழை என்ற அவர்களுடைய பாகுபாடு, கிறிஸ்தவ சரீரம் என்று சொல்லி ஐக்கியம் என்ற பொய்யை உருவாக்கினது. வேறு பிரிவினைகளைப் பற்றிச் சொன்ன அதே ஆதாரங்களின் மூலமாக, இந்த குடும்ப ஐக்கிய உணவில் பிரிவினைகள் இருப்பதை பவுல் கேள்விப்பட்டிருக்கலாம்.

கொரிந்துவின் பழக்கங்கள் சகிக்க முடியாததாய் இருந்தது, பிரச்சனையை மேற்கொண்டு பேசுமுன், அப்போஸ்தலன், தகவல்களில் **சிலவற்றை** மட்டுமே நம்பினதாக சொல்லி தன் குற்றச்சாட்டை மென்மையாக்கினான்.

அப்போஸ்தலனுக்கு, தங்களுக்குள்ளே உயர்ந்த வேறு பாடுகளை செய்து கொண்டிருந்த கிறிஸ்தவர்கள் கொண்டு வந்திருந்தப் பிரிவினையை குறித்து புகழுவது என்பது 1:10ல் அவர் சொல்லியிருந்த ஐக்கியத்தின் வெளிச்சத்தில் தன் சுபாவத்திற்கு நேர் மாறாக இருந்திருக்கும். **மார்க்கபேதங்களும் உங்களுக்குள்ளே உண்டாயிருக்க** வேண்டியதே என்பது ஜாக்கிரைதையான பரிசீலனையைக் கொடுக்கிறது. முதல் கண்ணோட்டத்தில், 11:19 ஒதுக்கி வைக்கப்பட்டது போலத் தெரிகிறது; 11:18ல் காணப்பட்ட பிரிவினையை குறித்து கடிந்து கொள்ள சட்டப்பூர்வமான தகுதி வேண்டுமென்று பவுல் நினைத்தது போல இருந்தது. அந்தப்படியே படித்தால், அப்போஸ்தலன் "மார்க்கபேதங்களை" ஏதோ ஒரு நெருக்கடியில் பாராட்டிக் கொண்டிருந்தான். 1:10 மற்றும் 11:18யை நோக்குகையில், அப்போஸ்தலன், தான் கடுமையாக புறக்கணித்த ஒன்றுக்காக, எந்த ஒரு சூழ்நிலையிலும், ஏன் விலக வேண்டும்? 11:19யை படிக்க இன்னும் உத்தம மார்க்கம் இருக்க வேண்டும். வசனமானது 11:18ல் சொல்லப்பட்ட "சிலவற்றை நம்புகிறேன்" என்ற சொற்றொடரின் விரிவாக்கமாக இருக்க வேண்டும்.

சபை சமுதாய ஐக்கிய உணவை பகிர்ந்துகொண்ட போது இருந்த உலகப்பிரகாரமான பிரிவினை பற்றிய தகவல்களை பவுல் சிலவற்றை நம்பியிருக்கலாம். தேவன் சபையை வனைந்து கொண்டிருந்தார் என்பதை அவர் பார்த்தார்; இயேசு எவ்வாறாக ஜீவிக்க வேண்டும் என்று போதித்தபடி ஜீவிக்கும்படி எடுத்த கொரிந்து விசுவாசிகளின் முடிவை அவர் பரிசீலித்துக் கொண்டிருந்தார். உங்களில் உத்தமர்கள் இன்னாரென்று வெளியாகும்படிக்கு, வேறுபாடுகள் தோன்றுவது அவசியம். சபையில் பிரிவினையின் சூழ்நிலை நிலவ கொரிந்தின் எல்லா கிறிஸ்தவர்களும் காரணமல்ல. யார் தங்கள் ஆடம்பரங்களை பகட்டாக காண்பித்தார்களோ அவர்களே பிரிவினைக்கு காரணமாக இருந்தவர்கள் (காண்க 11:27). மார்க்கபேதங்களின் ஆவியினாலே அவர்கள் புசித்து குடிக்கும்போது, அவர்கள் தங்கள் மீதும் மற்றும் கிறிஸ்துவின் சரீரமாகிய சபை மீதும் தேவனுடைய ஆக்கினைத்தீர்ப்பை வரவழைத்தார்கள் (11:29). அபாத்திரமாய் புசித்து, குடித்ததினால், அவர்கள் சபை என்னும் சரீரத்தின் ஐக்கியத்தை கெடுத்துக் கொண்டிருந்தார்கள். சிறிது கூட கருத்து வேறுபாடு இல்லாமல், சபை முழுவதும் சமுதாயத்தில் மேல் வர்க்கத்தின் ஆக்கிரமிப்புகளை ஒரு கிறிஸ்தவ வாழ்க்கையின் விதிமுறையாகவே அங்கீகரித்திருக்கக் கூடும்.

கொரிந்தியர் செய்துகொண்டிருந்த இத்தகைய பிரிவினைகளின் நிமித்தம், அவர்களுக்குள் இருந்த மிக பெரிய செல்வந்தர்கள் தனியாக பிரிந்து தெய்வீகத்திற்கும் மற்றும் பரிசுத்தத்திற்கும் எந்த ஒரு தொடர்பும் இல்லாமல் தங்கள் கூட்டத்தோடு சேர்ந்து கொண்டார்கள். அங்கு சுயநலம் மற்றும் அகந்தை மட்டுமே நிலவியிருந்தது. இங்கு சொல்லப்பட்ட பிரிவினைகள் 1 முதல் 3 வரையில் உள்ள அதே வலிமையால் உண்டானது அல்ல. அவர்கள் பெருமை மற்றும் உயர்ந்தவர்கள் என்ற மனப்பான்மையில் உருவாகி, சகோதர சகோதரிகளுக்கு இடையில் இடறல்களை உண்டாக்கினார்கள்.

**வசனம் 20. கர்த்தருடைய இராப்போஜனம்** என்ற சொற்றொடர் புதிய ஏற்பாட்டில் இந்த வசனத்தில் மட்டுமே தோன்றுகிறது. கிரேக்க மொழியானது சொந்தத்தை குறிக்கும்படி மேற்கோளை பயன் படுத்தாததினாலே, ஒருவர் ஆறாம் வேற்றுமை வழக்கை, (கர்த்தருடைய) "of the Lord," τοῦ κυρίου (*tou kuriou*); எதிர் பார்க்கலாம். ஆனால் பவுல் ஒரு அறிய பெயரடையான κυριακός (*kuriakos*) பயன்படுத்தினார், அதற்கு "கர்த்தருக்கு சொந்தமான."[20] என்று பொருள். இந்த ஒரு சொற்றொடர் வெளிப்படுத்தின விசேஷம் 1:10ல், மட்டுமே "கர்த்தருடைய நாள்" என்று மொழி பெயர்க்கப்பட்டு தோன்றுகிறது. "போஜனம்" மற்றும் "நாள்"க்கு முன் வந்த "கர்த்தருக்கு சொந்தமான" என்று பொருளடக்கம் கொண்ட பெயரடையின் பயன் கிறிஸ்துவுக்குள் வந்தவர்கள் இராப்போஜனம் மற்றும் சபை கூடுதல் வாரத்தின் முதலாம் நாளாய் இருக்க வேண்டுமென்று பவுல் கற்பித்ததை இது நிதர்சனமாக காட்டுகிறது. இந்த இரண்டு காரியங்களும், நாள் மற்றும் இராப்போஜனம், என்பது கர்த்தருக்கு சொந்தமானது. நினைவுகூருதல் மற்றும் ஞாபகம் ஒவ்வொருவருடைய இதயத்தில் உள்ளது. அநேக மொழியாக்கங்களில் புறக்கணிக்கப்பட்ட சொற்றொடரை பவுல் சேர்த்தார், ἐπὶ τὸ αὐτὸ (*epi to auto*), என்றால் **கூடி வருவது**. அப்போஸ்தலர் ஆரம்ப அத்தியாயங்களில் இது மிகவும் பொதுவானது (காண்க 1:15; 2:1, 44), மற்றும் கிறிஸ்தவர்களின் சமுதாய சுபாவத்தை வலியுறுத்துகிறது. கர்த்தருடைய நாளில் ஒன்றாக கூடி வருவது மற்றும் கர்த்தருடைய இராப்போஜனத்தை எடுக்கையில் பொதுவான அறிக்கையிடுதல் ஒவ்வொரு கிறிஸ்தவனின் சொத்து, பகிர்ந்து கொடுத்தல், மற்றும் பரலோகத்தில் தேவனுடைய வலது பாரிசத்தில் அமர்ந்திருக்கும் கிறிஸ்துவோடே (காண்க 10:16; எபி. 10:12) உறவாடுதல், இவைகள் வரையறுக்கப்பட்டது. நாள் மற்றும் இராப்போஜனம் ஒன்றாகவே வந்தது; அவர்கள் கர்த்தரின் பாடுகள் மற்றும் அவருடைய மரணத்தின் மீது ஜெயம் இரண்டையும் நினைவு கூர்ந்தார்கள். அவர்கள் மூலாதாரமாக அறிக்கை, வாழ்க்கைமுறை மற்றும் ஐக்கியத்தை ஒன்றாக கொண்டு வந்தார்கள்.

**வசனம் 21.** வெளிப்படையாகவே, கொரிந்துவில் கர்த்தருடைய

இராப்போஜனம் ஒரு சடங்காகவே மாறிக் கொண்டிருந்தது. சபை கர்த்தருடைய இராப்போஜனத்தை எடுத்துக் கொள்ளும் முறைமைகள் ஒரு பொருட்டல்ல என்று நினைத்திருக்கலாம். பவுல், "நீங்கள் நடந்துகொள்ளும் விதத்தில், கர்த்தருக்கு உங்கள் சடங்குகளில் எந்த ஒரு பங்கும் இல்லை. நீங்கள் அழைக்கும் இந்த 'கர்த்தருடைய இராப்போஜனம்' அவருக்கு எந்த வகையிலும் மகிமை தருவதில்லை" என்றார்.

பவுல் இரண்டு வெவ்வேறு விஷயங்களை சர்ச்சித்துக் கொண்டிருந்தார். 11:21ல், கர்த்தருடைய இராப்போஜனம், நினைவுகூருதல் மற்றும் ஆராதனையில் சபையின் கடைப்பிடித்தல் மற்றும் **அவரவர்கள் தங்களுடைய உணவில்** அக்கறை கொண்டிருக்கும் ஒரு ஐக்கிய போஜனம், இவ்விரண்டையும் அவர் பேசினார்.[21] கிறிஸ்தவர்கள் சமுதாய பொருளாதார அந்தஸ்தின் அடிப்படையில் சாதாரணமான உணவில் எப்படியாக வேறுபாடு செய்து கொண்டு, தாங்கள் கர்த்தரின் இராப்போஜனத்தில் பங்கு கொள்வதின் நிமித்தம் ஒரே சரீரம் மற்றும் ஐக்கியத்தை காட்டுகிறது என்று பொய்யானதை நடத்திக் கொண்டிருந்தார்கள். அப்போஸ்தலன், நிலவியிருந்த மனப்பான்மையை வித்தியாசப்படுத்தி இரண்டு சர்ச்சைக்கு நடுவில் சுதந்திரமாக நடமாடினார். சிலர் பசியோடு இருந்தனர், இன்னும் சிலர் குடித்திருந்தார்கள். பவுலின் வார்த்தையில் இருந்த உணர்ச்சி, அவர்களுடைய பழக்கம் சரீரத்தின் ஐக்கியத்தை கடுமையாக நிராகரிப்பதாக இருந்தது என்று பறைசாற்றுகிறது.

பவுலின் கடிந்துகொள்ளுதல்களை விவரிக்கும் ஒரு சிறந்த வழி, "அடிப்படை பிரிவினை பணக்காரன் (ஒப்பீட்டளவில்) மற்றும் ஏழைக்கு (ஒப்பீட்டளவில்) இடையில் இருந்தது"[22] என்று யூகிப்பதே என்ற Wayne A. Meeksன் முடிவு சரியானதாகவே இருக்கும். சபை ஐக்கிய உணவில், பணக்காரர்கள் தங்கள் அந்தஸ்தை காட்டிக் கொள்ளும் உணர்வை பறைசாற்றி ஏழைகளை அவமானப்படுத்தினார்கள். கர்த்தரின் இராப்போஜனத்தில், கொரிந்துவின் கிறிஸ்தவர்கள் தேவனுக்கு முன்பாக எல்லோரும் சரிசமானமான விசுவாசிகள் என்ற அறிக்கை செய்து கொண்டிருந்தார்கள். பொது விருந்தில், செல்வந்தர் வெளிப்படையாகவே அவர்கள் மற்றும் கொஞ்சம் இருந்தவர்களிடமிருந்து ஒரு தூரத்தை பராமரித்தார்கள்; கூட இருக்கும் கிறிஸ்தவர்களைக் குறித்த கவலை இல்லாமல், அவர்கள் விரும்பும்போது, அவர்கள் விரும்பினதை புசித்து குடித்தார்கள் (காண்க 11:33).

**வசனம் 22. புகழேன்** என்ற இந்த பாகத்துக்கு அடைப்புக்குறியிடுவது நல்லது (காண்க 11:17). கர்த்தரின் இராப்போஜனம் எப்படியாக ஆரம்பிக்கப்பட்டது (11:23-26) என்ற பவுலின் எடுத்துரைத்தலில் மட்டுமே முடியவில்லை என்று இந்த

வாக்கியம் நினைவூட்டுகிறது. பவுலுக்கு பொது விருந்தின்போது நிலவிய சமுதாய பாகுபாடு ஒரு கவலையாக இருந்தது. கர்த்தர் பாராட்டியிருந்த ஐக்கியத்தை மார்க்கபேதங்கள் நிராகரித்தது.

## கர்த்தருடைய இராப்போஜனம் (11:23-34)

வாசகர்கள் புதிய ஏற்பாட்டின் நான்கு சுவிசேஷங்களையும் வாசித்து முடித்த பிறகு, அவர்கள் பின் வரும் ஆவணங்களில் இயேசுவின் உவமைகள் மற்றும் செயல்களைக் குறித்த குறிப்பு-களை எதிர்பார்க்கலாம். ஆகிலும், அப்போஸ்தலருடைய நடபடிகள். நிருபங்கள், மற்றும் வெளிப்படுத்தின் விசேஷம் கர்த்தருடைய ஜீவியம் மற்றும் ஊழியத்தைக் குறித்து சிறிதாகவே சொல்லுகிறது. அவருடைய மரணம், அவருடைய உயிர்த்தெழுதல் மற்றும் திரும்பி வரும் வாக்குத்தத்தம் வலியுறுத்தப்பட்டது. எப்போதாவது, பவுல், கர்த்தரின் வார்த்தைகளை குறிப்பிட்டார் (1 கொரி. 7:10; 9:14), ஆனால் அவருடைய நிருபங்களில் எங்கேயும் கர்த்தருடைய இராப்போஜனத்தை அவர் கருதிய காரியத்திற்கு ஈடாக இல்லை.

கர்த்தருடைய இராப்போஜனத்தில், கர்த்தர் அவருடைய கிருபையை வெளிப்படுத்துகிறார் மற்றும் அவருடைய வல்லமையை பறைசாற்றுகிறார். அப்பம் மற்றும் ரசமானது ஒரு கிறிஸ்தவ விசுவாசத்தின் அடிப்படை நிகழ்வை நினைவுபடுத்துகிறது. அது ஒரு ஞாபகமாக, அதை விட அதிகமாகவே இருக்கிறது. நாம் “பானம்பண்ணுவது” கிறிஸ்துவின் இரத்தத்தின் “ஐக்கியமாக” இருக்கிறது மற்றும் அப்பம் “பங்குபெறுவது” அல்லது கர்த்தரின் சரீரத்தில் “பங்குகொள்ளுவது” என்று பவுல் தன் நிருபத்தில் எழுதினதை நாம் ஏற்கனவே பார்த்திருக்கிறோம் (10:16).

### இராப்போஜனத்தின் நிறுவனம் (11:23-26)

**23நான் உங்களுக்கு ஒப்புவித்ததைக் கர்த்தரிடத்தில்
பெற்றுக்கொண்டேன்; என்னவெனில், கர்த்தராகிய இயேசு தாம்
காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே அப்பத்தை எடுத்து
24ஸ்தோத்திரம்பண்ணி, அதைப்பிட்டு: நீங்கள் வாங்கிப் புசியுங்கள்,
இது உங்களுக்காகப் பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது;
என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். 25போஜனம்
பண்ணினபின்பு, அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் எடுத்து:
இந்தப் பாத்திரம் என் இரத்தத்தினாலாகிய புதிய
உடன்படிக்கையாயிருக்கிறது; நீங்கள் இதைப் பானம்பண்
ணும்போதெல்லாம் என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்
என்றார். 26ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப்
பாத்திரத்தில் பானம் பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும்**

**அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்.**

**வசனம் 23.** விவாதத்தின் இடையில், பவுல் தான் பிரசங்கித்த சுவிசேஷத்தைக் குறித்துச் சொன்னார், “நான் அதை ஒரு மனுஷனால் பெற்றதுமில்லை, மனுஷனால் கற்றதுமில்லை, இயேசு கிறிஸ்துவே அதை எனக்கு வெளிப்படுத்தினார்” (கலா. 1:12). அப்போஸ்தலன் எந்த மனுஷனுக்கும் எருசலேமிலிருந்த அப்போஸ் தலருக்கும் தன் அதிகாரத்துக்கு கடன்பட்டவனல்ல. அதே நேரத்தில், தனக்கு முன்பாக இந்த அப்போஸ்தலர்களிடமிருந்து பாரம்பரியத்தை அவன் பெற்றுக் கொண்டதையும் அவன் தள்ளிப்போடவில்லை (2:2), அல்லது கிறிஸ்தவ மரபுகளை இலகுவாக பாவிக்கும்படி விசுவாசிகளுக்கு அவன் போதிக்கவில்லை (2 தெச. 2:15). கொரிந்தியருக்கு ஒப்புவித்ததைக். … [தான்] **கர்த்தரிடத்திலிருந்து பெற்றுக்கொண்டதாக** பவுல் சொன்னபோது, கிறிஸ்து தனக்கு ஒரு தனிப்பட்ட வெளிப்பாட்டைக் கொடுத்திருந்தார் என்று அவர் சொல்லவில்லை. கர்த்தரிடத்தில் அவர் பெற்றுக் கொண்ட வெளிப்பாடானது அவருக்கு முன்பே இருந்த சுவிசேஷத்தின் அடிப்படை நிகழ்வுகளை அதிகார பூர்வமாக பேச ஆவியில் ஏவப்பட்ட அப்போஸ்தலர் மற்றும் தீர்க்கதரிசிகளிடமிருந்து வந்தது. கொரிந்தியர் கர்த்தருடைய இராப்போஜனத்தை எடுத்துகொள்ளும் முறையை திருத்துவதை விட இன்னும் அதிகமான ஒன்றை செய்வதே பவுலின் நோக்கமாக இருந்தது. இராப்போஜனத்தின் தாக்கங்கள் அதை தொடர்ந்த சமுதாய ஐக்கிய போஜனத்தின் மீது பதிய அவர் பாரப்பட்டார்.

பவுலின் முதலாம் சந்திப்பில் கர்த்தருடைய இராப்போஜனத்தை கவனிக்குமாறு கொரிந்தியருக்கு அவர் போதித்திருக்கலாம் காண்க (காண்க அப். 18:1-11). அவர் எங்கெல்லாம் சபையை ஸ்தாபித்தாரோ, கிறிஸ்தவர்கள் கர்த்தருடைய நாளில் ஒன்று கூடி வர வேண்டும் மற்றும் கர்த்தருடைய இராப்போஜனத்தை கடைப்பிடிக்க வேண்டும் என்று நிச்சயமாகவே போதித்தார். பவுல், வேறு சில மிஷனரிகளோடு கூட, **இப்படியாக, கர்த்தராகிய இயேசு தான் காட்டிக் கொடுக்கப்பட்ட இரவிலே அப்பத்தை எடுத்தார்**, கிறிஸ்தவர்கள் அப்பத்தை பிட்டு, பாத்திரத்தில் பானம் பண்ணும் போது, அவர்கள் இயேசுவின் தியாகத்தை நினைவுகூர்ந்தனர் என்று புதிய கிறிஸ்தவர்களுக்கு சொன்னார்கள்.

**வசனங்கள் 24, 25.** பவுல் மற்றும் லூக்கா மட்டுமே இயேசு அப்பம் பிட்குதலைக் குறித்து சொல்லும் போது அவர் ஸ்தோத்திரம்பண்ணி (εὐχαριστήσας, *eucharistēsas*) என்ற வார்த்தையை பயன்படுத்துகிறார்கள்.[23] மத்தேயு 26:26 மற்றும் மாற்கு 14:22, அர்த்தத்தில் அவ்வளவு வித்தியாசம் இல்லாமல் போனாலும், அவர் அப்பத்தை “ஆசீர்வதித்தார்” என்று குறிப்பிடுகிறது. ஒரு கிறிஸ்தவன் உடன் விசுவாசிகளோடு கூட அப்பத்தை புசிக்கும்போது, அவன்

கர்த்தருடைய சரீரத்தில் பங்குபெறுகிறான்.

ஒரு சில மத கூட்டங்கள் கர்த்தருடைய இராப்போஜனத்தின் அப்பத்தை ஒரு விசுவாசி புசிக்கும் போது, வாஸ்தவத்தில் கிறிஸ்துவின் சரீரமாக மாறுகிறது என்ற உபதேசத்தின், "ஒரு பொருள் வகையிலிருந்து மற்றொரு பொருள் வகையாக மாற்றுவதை" போதிக்கிறார்கள். மாறாக, இன்னொரு சந்தர்ப்பத்தில் (யோவான் 15:1), "நானே மெய்யான திராட்சைச் செடி" என்று சொன்னது போலவே "இது என் சரீரமாயிருக்கிறது" என்று இயேசு சொன்னார். ஒரு சின்னமாக மற்றும் ஆவிக்குரிய விதத்தில், இயேசு திராட்சை செடியாக இருப்பது, ஒரு உருமாற்றமாக இருப்பது போலவே அப்பமானது, இயேசுவின் சரீரத்தைக் குறிக்கிறது.

அப்பம் மற்றும் பானத்தின் முகாந்திரமாக, விசுவாசிகள், புவியை வரையறுக்க உதவியாய் தன் ஜனங்களுக்காக மரித்தார் என்று தங்களுடைய பொதுவான விசுவாசத்தை காட்டுகிறார்கள். அவர் நம்முடைய பாவங்களை சுமந்தார். கர்த்தருடைய இராப்போஜனத்தை எடுத்துக் கொள்ளுவது ஒரு ஒற்றுமையாக இருக்கிறது; அது ஒரு பகிர்ந்து கொள்ளுதலாக இருக்கிறது. அப்பத்தை மற்றும் பானத்தை பகிர்ந்து கொள்ளும்போது, விசுவாசிகள் ஒருவரோடொருவர் மற்றும் ஒன்றுபட்டு கர்த்தரோடு பகிர்ந்து கொள்ளுகிறார்கள். இராப்போஜனத்தின் முகாந்திரமாக, விசுவாசிகள் தங்கள் விசுவாசத்தை புதுப்பித்து, உன்னதத்திலிருந்து வல்லமையை பெற்றுக் கொள்ளுகிறார்கள். கர்த்தருடைய இராப்போஜனம் ஒரு நினைகூருதலாக இருக்கிறது, ஆனால் அது நினைவுகூருதல் மட்டுமே இல்லை.

ஒவ்வொரு வாரமும், விசுவாசிகளின் மனது சிலுவையை நோக்கிப் பார்க்கிறது. இரண்டு வசனத்திலும், நிகழ்வு காலம், தொடர்ந்து இரட்சகரின் மரணத்தில் நினைகூர்ந்து பங்குபெறுவதை அறிவுறுத்துகிறது. ஐந்தாம் நூற்றாண்டில், Augustine ஒரு லத்தீன் அறிக்கையை எழுதினார், அது இவ்வாறாக மொழி பெயர்க்கப் பட்டிருக்கிறது, "உமக்குள் நான் மாற்றம் அடையமாட்டேன், ஆனால் நீ எனக்குள் மாற்றமடையவாய்."[24] Augustine ஒரு வேளை தன் மனதில் "ஒரு பொருள் வகையிலிருந்து மற்றொரு பொருள் வகையாக மாற்றுவதை" வைத்திருக்கக்கூடும், தேவன் கர்த்த ருடைய இராப்போஜனத்தின் மூலமாக விசுவாசிகள் கிறிஸ்துவைப் போல மாற வல்லமை அளிக்கிறார் என்ற அவருடைய தீர்மானம் சரியானதாக இருக்கிறது. ஜனங்கள் உடலுக்குரிய ஆகாரத்தை உண்ணும்போது, அது அவருக்கு போஷாக்கு அளிக்கிறது மற்றும் அவர்களை மாற்றுகிறது; ஒருவர் கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்கு கொள்ளும்போது, மாற்றமானது ஒரு வித்தியாசமான முறையில் இருக்கும். அப்பத்தை மற்றும் பானத்தை எடுத்துக் கொள்ளும்போது,

விசுவாசிகள் கிறிஸ்துவில் பங்கு கொள்ளு கிறீர்கள் மற்றும், பங்கு கொள்ளுபவரின் விசுவாச அளவின்படியே, அவன் அல்லது அவள் இயேசுவைப் போலவே மாறுகிறார்கள்.

என்னை நினைவுகூரும்படி என்ற வார்த்தையை கர்த்தருடைய இராப்போஜனத்தை குறிக்கும்படி பவுல் பயன்படுத்தினபோது, குறைந்தது இரண்டு புரிந்து கொள்ளுதல் சாத்தியமாக இருக்கிறது. ஒருவேளை, இயேசு தாமே விசுவாசிகளை அவர்கள் இரட்சிக்கும்படியாக அவர் செலுத்தின விலை கிரயத்தை நினைவுகூரும்படி அழைத்திருப்பார். அப்படியானால், நினைவு கூருதல் நன்றிக்கடனுக்கு ஒப்பாயிருக்கும். இன்னொரு சாத்தியமானது, கர்த்தருடைய இராப்போஜனத்தை எடுத்துக் கொள்ளும் கிறிஸ்தவர்கள் தேவனை நோக்கி சிலுவையில் அவருடைய தியாகத்தை கருதும்படி, அவருடைய சிலுவையை "நினைவுகூர்ந்து" அவர்-களுடைய குற்ற உணர்வின் பாரத்தை எடுத்துப்போடும்படி முறையிடுகிறார்கள் என்ற அர்த்தத்தில் இயேசு சொல்லியிருப்பார். கொரிந்தியர் இராப்போஜனத்தை எடுத்துக் கொண்ட முறை ஒரு கேள்விக்குறியாக இருக்கிறது என்று வசனம் சந்தரப்பசூழல் பரிந்துரைக்கிறது. கிறிஸ்தவர்களாக, நம்மை இரட்சிப்பதற்காக இயேசு செலுத்தின் விலை கிரயத்தை நாம் பிரதிபலிக்க வேண்டும். ஒவ்வொரு வாரமும், நாம் சிலுவையை சிந்தித்துப் பார்க்கணும்.

இயேசுவின் இரத்தம் சிந்துதலின் மூலமாக தேவன் தன ஜனங்களோடு ஒரு புதிய உடன் படிக்கையை ஸ்தாபித்தார். தேவன் மோசேயின் மூலமாக இஸ்ரவேலரோடு செய்து கொண்ட உடன் படிக்கையிலிருந்து புதிய உடன்படிக்கைக்கு வித்தியாசப்படுத்த வேண்டும். மத்தேயு 26:28 மற்றும் மாற்கு 14:24ல், பாத்திரத்தை "புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது" என்று அழைக்கப்படுகிறது. லூக்கா 22:20, "இந்தப் பாத்திரம் உங்களுக்காக சிந்தப்படுகிற என்னுடைய இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது" என்று சொல்லுகிறது. பவுலுடைய சொற்றொடர் லூக்காவுக்கு ஒப்பாயிருக்கிறது, ஆனால் 1 கொரிந்தியரில் மட்டுமே, அவர் பாத்திரத்தை எடுத்து, **நீங்கள் இதை பானம் பண்ணும் போதேல்லாம் என்னை நினைவு கூரும்படி** இதை செய்யுங்கள் என்று சொன்னார் என்றிருக்கிறது. பொழிப்பான சுவிசேஷங்களில் மட்டுமே (Synoptic Gospels), இந்த வார்த்தைகள் அப்பத்தைப் பிட்ட பிறகு வருகிறது, பானத்தை ஆசீர்வதிக்கும்போது அல்ல.

காயத்திலிருந்து இரத்தம் வழிவது, ஒருவர் ஒரு காரியத்திற்காக அல்லது தாம் நேசிப்பவர்களின் வாழ்விற்காக தம்மையே கொடுக்கும் அளவின் வல்லமையான சித்திரமாக இருக்கிறது. சிந்தின இரத்தத்தின் தூய்மை பழைய உடன்படிக்கையின் ஆழத்திற்கு பாய்ந்து ஓடுகிறது.

தேவன் நோவாவோடு உடன் படிக்கை செய்துகொண்டபோது, “மாம்சத்தை அதின் உயிராகிய இரத்தத்தோடு புசிக்க வேண்டாம்” (ஆதி. 9:4) என்று கட்டளை யிட்டார். “மோசே கர்த்தருடைய வார்த்தைகளையெல்லாம் எழுதி வைத்த” (யாத். 24:4) பிறகு, காளைகளை பலியிட கட்டளையிட்டார். “உடன்படிக்கையின் புஸ்தகத்தை” எடுத்து, “ஜனங்களின் காது கேட்க” வாசிக்க மற்றும் ஜனகூட்டத்தார் மேல் இரத்தத்தைத் தெளிக்க முற்பட்டான். அவர் சொன்னது, “கர்த்தர் உங்களோடு பண்ணின உடன்படிக்கையின் இரத்தம் இதுவே” (யாத். 24:7, 8). எபிரெயர் புத்தகத்தின் எழுத்தாளன் “… இரத்தஞ்சிந்துதலில்லாமல் மன்னிப்பு உண்டாகாது” (எபி. 9:22) என்ற வார்த்தையை ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மையாகவே எடுத்தார். இயேசுவின் சிந்தின இரத்தம், அவருடைய அன்பிற்கு மற்றும் அவருடைய தியாகத்தின் அளவிற்கு ஒரு சாட்சியாக இருக்கிறது. கிறிஸ்தவர்கள் நடுவில் மன்னிப்பு, நம்பிக்கை, ஐக்கியம் மற்றும் பெலன் கொள்ளுவதின் தொடர்ந்த அடையாளமாக இருக்கிறது.

தேவன் தம்முடைய ஜனங்களோடு கூட உடன்படிக்கை செய்துகொள்கிறார் என்பது பழைய உடன்படிக்கையின் ஒரு சிறந்த ஆழமான மற்றும் பிரியத்திற்குரிய கருத்தாக இருக்கிறது. எபிரெய எழுத்தான בְּרִית (*b^e^rith*, “covenant”), இரண்டு அல்லது அதிக நபர்களோடு செய்யும் ஒரு ஒப்பந்தமாக இருக்கிறது, ஆனால் சரிசமானமான ஆட்களோடு இருக்க அவசியமல்ல. அல்ல. LXXல் *b^e^rith* διαθήκη (*diathēkē*, “covenant”) என்று கூறப்பட்டிருக்கிறது மற்றும் அதிலிருந்து புதிய உடன்படிக்கையில் கூட்டுறவு வார்த்தையாக மாறுகிறது. தேவன் நோவாவோடு கூட (ஆதி. 9:9), ஆபிரகாமோடு (ஆதி. 15:18), இஸ்ரவேல் ஜனங்களோடு (யாத். 34:27), மற்றும் தாவீதோடு (2 சாமு. 23:5). உடன்படிக்கை செய்து கொண்டார். தீர்க்கதரிசியான எரேமியா, தேவன் தம் ஜனங்களோடு கூட செய்துகொண்ட வெவ்வேறு உடன்படிக்கைகளை, ஒரு “புது உடன்படிக்கை”யினாலே மனிதரின் இருதயத்தில் எழுதி புறந்தள்ளப்படும் காலத்தை குறித்து முன்னறிவித்தார் (எரே. 31:31-34; காண்க எபி. 8:7-13). “என் இரத்தத்தினாலாகிய புது உடன்படிக்கை” என்று இயேசு சொன்னபோது, தேவனுடைய சுய வெளிப்பாட்டைக் குறித்து ஒரு நீண்ட வரலாறை வரைந்து கொண்டிருந்தார். கிறிஸ்தவர்கள் தேவனுடைய கிருபையின் புது உடன்படிக்கையின் வாரிசுகள் என்று அவர் அறிவித்துக் கொண்டிருந்தார் (2 கொரி. 3:6).

**வசனம் 26.** கர்த்தருடைய இராப்போஜனமானது, நினைவு கூருதலாலே பின் நோக்கி பார்ப்பது மற்றும் விசுவாசிகளோடு ஐக்கியத்தோடு இருப்பதோடு, கூட கர்த்தருடைய இரண்டாம் வருகையைக் கூட எதிர் நோக்குகிறதாய் இருக்கிறது. இராப் போஜனத்தின் முகாந்திரம், கிறிஸ்தவர்கள், **கர்த்தருடைய மரணத்தை**

**அவர் வருமளவும் தெரிவிக்கிறார்கள்.** கொரிந்தியர் அப்பத்தை புசித்து, பானம்பண்ணும்போது கர்த்தர் மரித்தார் மற்றும் மறுபடியும் வருகிறார் என்று நினைவுகூரும்படி வாஸ்தவம் மற்றும் வாய் மொழியின் முறையை உபயோகித்திருக்கலாம்; ஆனால் ஒருவேளை பவுல் "அறிவிப்பதை" அடையாள பூர்வமாக அர்த்தப்படுத்தியிருக்கலாம். அதாவது, புசிக்கும் மற்றும் குடிக்கும் கிரியையில், இந்நாட்களில் எல்லோரும் கர்த்தருடைய இராப் போஜனத்தைக் கடைப்பிடிப்பது போலவே, இந்த கிறிஸ்தவர்கள், அவருடைய தியாகத்தின் மரணம் மற்றும் கிறிஸ்து மறுபடியும் வருகிறார் என்ற அவர்களுடைய விசுவாசத்தை ஒரு அடையாளமாகவே அங்கீகரித்தார்கள்.

## இராப்போஜனத்தைக் கடைப்பிடிப்பது (11:27-34)

**[27]இப்படியிருக்க, எவன் அபாத்திரமாய்க் கர்த்தருடைய அப்பத்தைப் புசித்து, அவருடைய பாத்திரத்தில் பானம் பண்ணுகிறானோ, அவன் கர்த்தருடைய சரீரத்தையும் இரத்தத்தையும் குறித்துக் குற்றமுள்ளவனாயிருப்பான். [28]எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து, இந்த அப்பத்தில் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணக்கடவன். [29]என்னத்தினாலெனில், அபாத்திரமாய்ப் போஜனபானம் பண்ணுகிறவன், கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறியாததினால், தனக்கு ஆக்கினைத்தீர்ப்பு வரும்படி போஜனபானம் பண்ணுகிறான். [30]இதினிமித்தம், உங்களில் அநேகர் பலவீனரும் வியாதியுள்ளவர் களுமாயிருக்கிறார்கள்; அநேகர் நித்திரையும் அடைந்திருக்கிறார்கள். [31]நம்மை நாமே நிதானித்து அறிந்தால் நாம் நியாயந்தீர்க்கப்படோம். [32]நாம் நியாயந்தீர்க்கப்படும்போது உலகத்தோடே ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படாதபடிக்கு, கர்த்தராலே சிட்சிக்கப்படுகிறோம். [33]ஆகையால், என் சகோதரரே, நீங்கள் போஜனம்பண்ணக் கூடிவரும் போது, ஒருவருக்காக ஒருவர் காத்திருங்கள். [34]நீங்கள் ஆக்கினைக்கேதுவாகக் கூடிவராதபடிக்கு, ஒருவனுக்குப் பசியிருந்தால் வீட்டிலே சாப்பிடக்கடவன். மற்றக் காரியங்களை நான் வரும்போது திட்டம் பண்ணுவேன்.**

**வசனம் 27.** கிறிஸ்தவர்கள் நீடித்த காலமாக இந்த வசனத்தைக் கொண்டு வியந்திருக்கிறார்கள். ஒரு சிலர், கர்த்தருடைய இராப்போஜனத்தை அபாத்திரமாய் எடுத்துக்கொள்ளுவோமோ என்று பயப்படுகிறார்கள். தங்களின் பாவத்தின் உணர்வால் ஒரு சிலர் அப்பத்தை வேண்டா வெறுப்பாக உட்கொண்டிருக்கிறார்கள் அல்லது நிராகரித்திருக்கிறார்கள்.

அபாத்திரமாய் கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்கெடுப்பது என்பது பாவங்களுக்கு பட்சாதாபம் இல்லாமல் இருப்பது என்று

புரிந்து கொள்ளப்பட்டுள்ளது. அநேக கிறிஸ்தவர்களிடத்தில் தாங்கள் முற்றிலும் துறந்துவிடாத ஒரு சில பாவங்கள் இருக்கிறது (காண்க கொலோ. 3:8). அத்தோடுகூட, அநேகர், இராப்போஜனத்தில் பங்கெடுக்கும்போது ஒரு அம்சத்தில் தங்கள் மனது அலைபாய்வதை கட்டுப்படுத்த முடியாமல் போராடுகிறார்கள். ஒரு வகையில், கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்குகொள்ள ஒருவருக்கும் தகுதியில்லை. பவுல் கிறிஸ்தவர்களை ஒரு இறுதி குறிக்கோளாக பாத்திரவான்களாய் இருக்க அழைத்திருந்தால், யாருமே அப்பத்தை புசித்து பாத்திரத்தில் பானம் பண்ணியிருக்க துணிந்திருக்க மாட்டார்கள்.

**கர்த்தருடைய சரீரம் மற்றும் இரத்தம்**, என்பது சிலுவையில் கர்த்தருடைய சரீரத்தை அல்லது கிறிஸ்துவின் சரீரமாகிய சபையை குறிக்கலாம் என்ற கவனிக்கையில் இந்த வசனத்தின் உத்தம புரிந்து கொள்ளுதலுக்கு வரலாம். சபையை, கிறிஸ்துவின் சரீரத்திற்கு மட்டுமல்லாமல் "சரீரம் மற்றும் இரத்தத்து"க்கு ஒப்பிடுவது என்பது அசாதாரணமானது. மார்க்கபேதங்களோடு (11:18) கர்த்தருடைய இராப்போஜனத்தை பற்றி சர்ச்சிப்பது, பவுலின் முழு சொற்றோட்டில் பயன்படுத்த காரணமாக இருக்கலாம். அப்போஸ்தலர் கர்த்தருடைய இராப்போஜனம் நிறுவுவதைக் குறித்து எழுதிக் கொண்டிருந்தார், காரணம் அது கர்த்தருடைய மற்றும் அவருடைய ஜனங்களின் ஐக்கியத்தை அறிவிக்கிறது. அவர்களுடைய ஐக்கியத்தை அறிவிக்கும்படி அப்பத்தைப் பிட்டு பிறகு அவர்கள் சொன்ன ஐக்கிய உணவின்போது ஒரு சமுதாயவணிக பேகையை இழைத்து தங்களுக்குள் பிரிவினைகள் செய்து கொள்ளும் (11:20, 21). அபத்தத்தை கொரிந்தியரில் திணிக்க அவர் விரும்பினார்.

கர்த்தருடைய இராப்போஜனத்தை எடுத்துக் கொண்டு, அதனுடைய சாரத்தை தங்கள் பழக்கத்தின் வடிவாக புறக்கணிப்பது தான் "அபாத்திரமாய்" எடுத்துக்கொள்ளுவது ஆகும். கிறிஸ்தவர்கள் தங்கள் சுயநலத்திற்காக, கிறிஸ்துவின் சரீரத்தைப் பிரித்து, மற்றவர்களைக் குறித்து யோசிக்காமல், அவர்கள் கர்த்தருடைய இராப்போஜனத்தில் அபாத்திரமாய் பங்கு கொண்டார்கள். KJVயில் இருக்கும் "அபாத்திரமாய்" என்பது, கிறிஸ்தவனை தன்னுடைய பாவமன்னிப்பை அல்ல, ஆனால் கொரிந்துவில் இராப் போஜனத்தை எடுத்துக் கொள்ளும் முறையை விவரிக்கிறது. கொரிந்தியர் அப்பம் மற்றும் பானத்தை பகிர்ந்துகொண்டு, பிறகு ஒரு கையில் திரளாக இருந்து மறு கையில் பசியோடு இருக்கும் குழுக்களாக பிரிந்து, தங்களின் சரீரத்தின் ஐக்கியத்தைக் கொண்டாடிக் கொண்டிருந்தார்கள். சபையின் பிரிவினை அங்கத்தினரை "கர்த்தருடைய சரீரம் மற்றும் இரத்தத்தை" குறித்து குற்றவாளிகள் ஆக்கியது. Gordon D. Fee காரியம் இப்படியாக இருந்திருக்கலாம் என்று நினைக்கிறார்:

அவர்களுடைய உணவின் பதிப்பு திருப்திக்கும் குறைவானதாக இருந்திருக்கலாம் ... ஒருவேளை அதிக அளவிலிருக்காது, காரணம் அவர்கள் சரியான முறையில் "கிறிஸ்துவை சிந்திக்கவில்லை," அல்லது அவரோடு சரியான உறவில் இருக்க தவறினார்கள், ஆனால் அவர்கள் ஒருவரையொருவர் நிந்தித்தபடியால், மரணத்தின் அம்சத்தையே அவர்கள் விளக்கினார்கள் ... [25]

**வசனம் 28.** ஒரு மனிதன் தன்னுடைய இரக்கத்தை, தன்னுடைய குடும்பத்தை பராமரிப்பது, அல்லது அவன் மொத்தத்தில் யார் என்ற பங்களிப்புக்கு காரணமான யாதொன்றையும் பிரதிபலிப்பதில் சுயபரிசீலனை செய்துக் கொள்ளுவது அவனுக்கு ஆதாயமாக இருக்கும். ஒவ்வொரு தனிப்பட்ட மனிதனும் கிறிஸ்துவில் அவனுடைய அல்லது அவளுடைய நம்பகத்தை பரிசீலிக்க வேண்டும். இந்த ஒரு மனப்பான்மை கர்த்தருடைய இராப்போஜனத்தின் சமுதாயமாக பங்கெடுப்பில், சரியாக ஒன்று சேருகிறது. கொரிந்து சபையில் சுய பரிசீலனை என்பது "கர்த்தருடைய சரீரம் மற்றும் இரத்தத்தில்" அல்லது சபையின் ஐக்கியத்திற்கு இராப்போஜனத்தின் தாக்கங்களை கருத்தில் கொள்ளுவது என்று அர்த்தம் கொடுத்தது.

பவுல் கொரிந்தியரை தங்களின் பழக்கங்களில் பரிசீலிக்கச் சொன்னார்: **தன்னைத்தான் சோதித்து அறியவேண்டும்.** ஒரு கிறிஸ்தவன் கடந்த வாரங்களில் செய்த பாவத்தை ஞாபகப்படுத்தும்போது, அது கர்த்தருடைய இராப்போஜனத்தை புறக்கணிக்க ஒரு அழைப்பல்ல. அப்படியானால், யாருமே அப்பத்தைப் பிட்டு பாத்திரத்தில் பானம் பண்ண முடியாது. எல்லோரும் பாவம் செய்திருக்கிறார்கள் (ரோமர் 3:23); எல்லோரும் அனுதினமும் பாவம் செய்கிறார்கள். பவுல் அந்த அர்த்தத்திலும் சொல்ல-வில்லை, அப்பம் மற்றும் திராட்சை ரசம் பங்கிடும்-போது ஒருவன் தன் மனதை கிறிஸ்துவின் மரணத்தில் வைக்காமல் போனால், இராப் போஜனத்தை எடுத்துக் கொள்ளக் கூடாது. "அபாத்திரமாய்" (11:27) இந்த இரண்டு காரியங்களையுமே சம்பந்தப்படுத்துவதில்லை. இந்த சந்தர்ப்ப சூழலில், பவுல், விருந்தில் ஐக்கியத்தை அடையாளப்படுத்துவதை பிரயோகத்தில் கொண்டு வரும்படி கேட்டுக் கொண்டார். ஒரு கிறிஸ்தவன் பரிசீலித்து பாவத்தின் செயல்களை மாற்றிக்கொள்ள வேண்டும்; ஆனால் வேறு நேரங்களை விட கர்த்தருடைய இராப்போஜனத்தை எடுத்துக் கொள்ளும் அந்த நேரத்தில் இது உண்மையாகாது. இராப்போஜனத்தை எடுத்துக் கொள்ளும்போது; கர்த்த-ருடைய சரீரத்தின் ஒவ்வொருவரும் சிலுவையை மற்றும் அவனுடைய பாவத்திற்காக செலுத்தப்பட்ட விலைக்கிரயத்தை நினைவுகூர வேண்டும். இவை எல்லாமே உண்மைதான், ஆனால் கொரிந்து சபையின் அவர்களுடைய ஐக்கியத்தில் அவர் தவறினார்கள். கிறிஸ்தவர்கள் கர்த்தருடைய இராப்போஜனத்தை எடுத்துக் கொண்டு

சரீரத்தின் ஐக்கியத்தை வளர்த்துக் கொண்டிருந்தார்கள், ஆனால் நடைமுறையில் அவர்கள் பிரிவினையை வளர்த்துக் கொண்டிருந்தார்கள். இந்த பிரிவினையின் செயலுக்காகவே, அவர்கள் இராப்போஜனத்தை அபாத்திரமாய் எடுத்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் சமுதாயத்தின் தனிக்குழுவாக, வசதி படைத்த அங்கத்தினர் சேர்ந்து கொண்டிருக்கையில், என்ன நடந்து கொண்டிருந்தது என்று சகோதரர்கள் கவனிக்க வேண்டி இருந்தது. இந்த ஒரு நடவடிக்கையை பரிசீலிப்பு நிராகரிப்புக்கு வழிவிடும் என்று பவுல் நம்பினார். சமுதாய மேசை, கர்த்தருடைய இராப்போஜனம் மற்றும் அதை தொடர்ந்த உணவின் மூலமாக சரீரத்தின் ஐக்கியத்தை சரியாக அறிவிக்கும்போது, அது ஒரே மாதிரியான செய்தியை கொடுத்தது.

சரீரத்தின் ஐக்கியத்தைப் புறக்கணித்து இராப்போஜனத்தில் பங்கேற்பது, ஒருவன் தனக்குத் தானே ஆக்கினைத்தீர்ப்பைப் புசித்துக் குடிப்பதே ஆகும். கொரிந்தியர் செய்து கொண்டிருந்த முறையில் கர்த்தருடைய இராப்போஜனத்தின் அர்த்தத்தை புறக்கணிக்க சாத்தியமாக இருக்கையில், இதே குற்றம் இன்னொரு வழியிலும் சாத்தியமாகும். கிறிஸ்தவ ஒழுக்கநெறிக்கு இந்த ஒரு அப்பட்டமான அவமரியாதைக்கும் அதே விளைவு தான் நேரிடும்.

**வசனம் 29. புசித்து பானம் பண்ணும்** ஒருவர் கர்த்தருடைய இராப்போஜனத்தை நினைவுகூர்ந்து, கிறிஸ்துவில் மற்றும் சகவிசுவாசிகளோடு ஐக்கியத்தை, மற்றும் நித்திய ஜீவனுக்கு நம்பிக்கையோடு எதிர்ப்பார்க்கும் காரியத்தை கண்டு கொள்ளு வதே கிறிஸ்துவின் வடிவமைப்பாக இருக்கிறது. அப்பம் பிட்கும் போது மற்றும் பானம் பண்ணும்போது ***சரீரத்தை சரியாக நியாயத் தீர்ப்பிலிருந்து*** தவறுவது கர்த்தருடைய ஆக்கினைத்தீர்ப்பை (κρίμα, *krima*), அதாவது அவருடைய கண்டனத்தை வரவழைக்கிறது.

“சரீரம்” என்று பவுல் எந்த அர்த்தத்தில் சொன்னார்? அநேக வாசகர்கள் அப்போஸ்தலனின் இராப்போஜனத்தின் விவரிப்பில் கவனம் செலுத்தி விவரிப்பதற்கு காரணமான சூழ்நிலையை கவனிக்க தவறுகிறார்கள். விரிந்த ஒரு சூழ்நிலை “சரீரத்தின்” விவரணையைக் கொடுக்கிறது.

இந்த வசனத்தில் “சரீரம்” என்பது சிலுவையில் தொங்கின கிறிஸ்துவின் சரீரம் என்று புரிந்துக் கொள்ளப்படுகிறது. 11:27ல் அப்பம் மற்றும் பானம் பண்ணுவதில் “அபாத்திரமாய்” என்பதைப் பற்றிய பவுலின் கடிந்துகொள்ளுதலை ஒன்று சேர்த்து, ஒருவர் தம் மனதை கர்த்தர் செலுத்தின கிரயம், சிலுவையில் தொங்கின தன் சரீரத்தை கவனிப்பதில் தவறியதையே, அபாத்திரமாய் பங்கு கொள்ளுவது மற்றும் தன் மேல் ஆக்கினைத்தீர்ப்பை வரவழைப்பது என்று கிறிஸ்தவர்கள் ஒரு முடிவுக்கு வருகிறார்கள். மோசமாக சான்றிடப்பட்ட கிரேக்க கையெழுத்து பிரதிகளின் மூலமாய்

மொழியாக்கம் கொடுக்கையில் KJV இன்னும் அதிக குழப்பத்தை சேர்த்திருக்கிறது: "என்னத்தினாலெனில், அபாத்திரமாய்ப் போஜன பானம் பண்ணுகிறவன், கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறியாததினால், தனக்கு ஆக்கினைத்தீர்ப்பு வரும்படிப் போஜனபானம் பண்ணுகிறான்." சிறந்த மற்றும் மிக பழமையான கையெழுத்து பிரதிகள் 11:29ன் "அபாத்திரமாய்"யை திரும்ப சொல்லுவதில்லை, மற்றும் "கர்த்தருடைய" என்பதற்கும் சரிசமானமான ஒன்றை அவர்கள் எழுதவில்லை. புசித்து பானம் பண்ணினவர்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பைக் குறித்து பவுல் எச்சரித்துக் கொண்டிருந்தார், ஆனால் "சரீரத்தை சரியாக நியாயம் தீர்க்கவில்லை."

"சரீரம்" என்பது சபைக்கு பவுல் உபயோகித்த ஒரு உருவகமாக இருக்கிறது. "... அநேகரான நாம் ஒரே அப்பமும் ஒரே சரீரமுமா யிருக்கிறோம்" (10:17); "... ஒரே சரீரத்தின் அவயவங்களெல்லாம் அநேகமாயிருந்தும், சரீரம் ஒன்றாகவேயிருக்கிறது" (12:12) என்று அவர் சொன்னார். கொரிந்தியர் தவறினது, சரியான சுய பரிசோதனை இல்லாமல் இராப்போஜனத்தை எடுத்து கொண்டதினாலே அல்ல; பிரிவினைகள் அங்கீகரிக்கப்படலாம் என்பது போல கர்த்தருடைய சரீரமாகிய, சபையை நடத்தின விதத்தில் தவறினது. சிலுவையில் வாஸ்தவமான சரீரத்தை கொரிந்தியர் புறக்கணிக்கவில்லை என்பதை நாம் கருதவேண்டும்; சபையின் ஐக்கியத்தை நிலைநாட்ட அவர்கள் தவறியிருந்தார்கள்.

**வசனம் 30.** பின்பு பவுல், **இதினிமித்தம், உங்களில் அநேகர் பலவீனரும் வியாதியுள்ளவர்-களுமாயிருக்கிறார்கள்; அநேகர் நித்திரையும் அடைந்திருக்கிறார்கள்** என்று சொல்லுகிறார். வேறு சில இடங்களில், பவுல் "நித்திரை" என்ற பேச்சு உருவத்தை கொண்டு "மரணம்" என்ற அர்த்தத்தில் பயன்படுத்தினார் (15:51; 1 தெச. 5:10). "அநேகர் நித்திரை" என்று அப்போஸ்தலன் சூட்சியமாக கொரிந்துவில் அனேக கிறிஸ்தவர்கள் ஆவிக்குரிய ரீதியில் மரித்திருக்கிறார்கள் என்று சொன்னார். உங்களில் "அநேகர்" "பலவீனரும் வியாதியுள்ளவர்களுமாயிருக்கிறார்கள்" என்று நினைவூட்டினார். செல்வந்தர்கள் அப்பத்தைப் புசித்து பானம் பண்ணும்போது சரீரத்தின் ஐக்கியத்தை வெளிப்படுத்தினார்கள், ஆனால் அவர்கள் "அபாத்திரமாய்" (11:27) புசித்துக் குடித்துக் கொண்டிருந்தார்கள். "இதனிமித்தம்" தங்கள் மீது இடர்பாடுகள் வந்திருந்தது. அவர்களுடைய அவபக்தியின் நிமித்தம் கொரிந்துவில் பாதிப்புகள் ஏற்பட்டிருந்தது என்று பவுல் சொன்னார். ஒரு சிலர் கர்த்தரால் சிட்சிக்கப்பட்டார்கள் (11:32; காண்க எபி. 12:5-7), இன்னும் சிலர், சபை சாதாரணமாக தழுவி கொண்டிருந்த மாய் மாலத்தின் நிமித்தம் மரணம் அடைந்திருந்தார்கள்.

**வசனம் 31.** அப்போஸ்தலன் தன்னுடைய எச்சரிப்பை கீழ்கோடிட

உண்மைக்கு நேர்மாறான நிலைமையை அமர்த்தினார் (εἰ [*ei*] மற்றும் protasisல் அறிகுறியை தொடர்ந்து ἄν [*an*]ல் apodosis). அவர்கள் தங்களை பரிசீலித்துக் கொண்டிருந்திருந்ததால் பவுலுக்கு அந்த விஷயத்தில் நியாயம்த் தீர்க்க தேவையற்றதாக இருந்திருக்கும். அதி முக்கியமாக, தேவன் அவர்களை நியாயம் விசாரித்திருக்கமாட்டார். ஆகிலும், அவர்கள் **தங்களை சோதித்துப் பார்க்கவில்லை. நம்மை நாமே நிதானித்து அறிந்தால் நாம் நியாயந்தீர்க்கப்படோம்**, என்று பவுல் எழுதினார். தங்களை நிதானித்து அறியாத கிறிஸ்தவர்களை தேவன் ஆக்கினை தீர்ப்பளித்தார். சுய பரிசீலனை மற்றும் பாவங்களுக்காக மனஸ்தாபப்படுவதே தேவனை மகிமைப் படுத்துவது மற்றும் அவருடைய தயையை பெறுவதற்கு வழியாகும். கொரிந்தியர் தங்களின் பழக்கங்களை நேர்மையாக பார்க்க வேண்டும் என்றே பவுல் கண்டித்தார். பவுலின் முதல் நபர் பன்மை சுட்டுப்பெயரின் பயன்பாடு அவனுடைய கடிந்து கொள்ளுதலை மென்மையாக்கினது. அவரோடு கூட அடையாளம் காண்கையில், தெய்வீகமான வாழ்விற்கு சுய பரிசீலனை என்றும் முடியாத ஒரு பகுதியாக இருக்கிறது.

**வசனம் 32.** முதல் நபர் பன்மையைத் தொடர்ந்து, அப்போஸ்தலன் எழுதினார், **நாம் நியாயந்தீர்க்கப்படும் போது கர்த்தராலே சிட்சிக்கப்படுகிறோம்** (வலியுறுத்தல் சேர்க்கப்பட்டிருக்கிறது). கொரிந்து சபையில் தேவனுடைய தலையீடு, ஒரு சில வியாதிகள் மற்றும் மரணத்தில் முடிந்திருந்தது. தேவன், தன் சபை ஏதாவது செய்யட்டும் என்று தனியாக நின்றிருக்கவில்லை. அவர் எப்பொழுதும் தனியாகவே நிற்கிறார் என்று கிறிஸ்தவர்கள் நினைக்க காரணம் ஒன்றுமில்லை. KJV மொழி பெயர்ப்பாளர் கிரேக்க சொற்றொடரைக் கொடுத்தார்கள் (ὑπὸ τοῦ κυρίου παιδευόμεθα, *hupo tou kuriou paideuometha*), "நாம் கர்த்தரால் சிட்சிக்கப்படுகிறோம்" வலியுறுத்தும் வார்த்தை முறை இந்த அர்த்தத்தை கொடுக்கிறது: "கிறிஸ்தவர்கள் தேவனாலேயன்றி வேறு யாராலும் சிட்சிக்கப்படுகிறதில்லை."

தேவனுடைய நியாயமான வழிகள் மனித அறிவுக்கு அப்பாற்ப்பட்டதாக இருக்கிறது என்று கண்டுபிடித்தார் (காண்க யோபு 38), ஆனால் இவ்வளவு மட்டும் தெளிவாகிறது: தேவன் தான் நேசிப்பவர்களை, அவர்கள் **உலகத்தோடு கூட ஆக்கினைக் குள்ளாக்கக்கூடாது** என்பதற்காக நியாயம் தீர்க்கிறார் மற்றும் சிட்சிக்கிறார். தேவனுடைய எல்லா நியாயத்தீர்ப்புகளும் உலகத்தின் முடிவுக்கு வைக்கப்படவில்லை. கொரிந்து சபை விதிமுறையாக அங்கீகரித்திருந்த பிரிவினையின் செயலானது தேவன் அவர்கள் விளக்குத் தண்டை அவர் நடுவிலிருந்து எடுத்துப் போடப்படும் அபாயம் இருந்தது (காண்க வெளி. 2:5).

**வசனம் 33.** இந்த வசனத்தில் அப்போஸ்தலன் தன்னுடைய யதார்த்தமாக பேசின வார்த்தைகளை என் **சகோதரரே** என்ற அன்பின்

சொற்றொடரால் மேன்மையாக்கினார். இங்கேயும், கொரிந்தியர் ஒன்று கூடி வரும்போது, அவர்களுக்குள் இருந்த பிரிவினையின் விஷயத்தை அவர் விட்டு விடவில்லை. கர்த்தருடைய இராப்போஜனத்தைக் குறித்த சர்ச்சை சபையில் இராப்போஜனத்தை எடுக்கும்போது இருந்த ஒரு சில குறிப்பிட்ட நிந்தனைகளை சம்பந்தப்படுத்தியது. அவர் அவர்களுடைய பிரிவினை மற்றும் அவர்களுக்கு ஐக்கியத்தின் அவசியத்தை குறித்த தமது போதனையை முடிக்கையில், 11:17ல் ஆரம்பித்த கண்டித்தல் சுருக்கமாகக் கூறினார். தேவனுடைய பிள்ளைகள் பணக்காரரோ ஏழைகளோ; யூதரோ புறஜாதியாரோ, சுயாதீனரோ அடிமைகளோ, ஆண்களோ பெண்களோ, சிறியவரோ முதியவரோ - எல்லோரும் குற்றச்சாட்டில் மற்றும் சிலுவையில் வெளிப்பட்ட தேவனுடைய கிருபையின் அவசியத்தில் சரிசமானமாக இருக்கிறார்கள்.

குழுக்களில் பிரிவினையானது, மூல கிறிஸ்தவ விசுவாச அறிக்கையை நிராகரித்தது. அவர்கள் அப்பத்தைப் பிட்டு பானம் பண்ணி, பின்பு “தான் தான் தன்னுடைய சொந்த போஜனத்தைப் பண்ண பிரிந்து கொள்ளும்போது” (11:21), அவர்கள் “கர்த்தருடைய இராப்போஜனத்தை” அவர்கள் எடுத்து கொள்ளும் முறையில் எடுத்துக் கொள்ளவில்லை (11:20). தெளிவாகவே இராப் போஜனத்தை தவறாக கடைப்பிடித்தார்கள்.

**ஒருவருக்காக ஒருவர் காத்திருங்கள்** என்ற பவுல் கடிந்து கொள்ளுதல், அவர்களை ஐக்கிய போஜனத்தில் சமாதானத்தினால் ஆவியின் ஒருமையை காத்துக்கொள்வதற்காக அழைத்தான் (எபே. 4:3). இந்த போஜனத்தின் போது அவர்களுடைய சமுதாய கலப்புகள், அவர்கள் கர்த்தருடைய இராப்போஜனத்தில் அப்பம் பிட்டு பாத்திரத்தில் பானம் பண்ணும்போது செய்யும் அதே அறிக்கையைச் செய்ய வேண்டும். இவ்விரண்டுமே வெவ்வேறு நிகழ்வுகளாக இருந்தாலும், கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்கு கொள்ளுவது மற்றும் உணவைப் பகிர்ந்து கொள்ளுவது இரண்டுக்குமே தேவஜனங்களுக்குள் ஐக்கியம் காணப்பட வேண்டும்.

**வசனம் 34.** கர்த்தருடைய இராப்போஜனத்தின் நோக்கம் பசி தீர்ப்பதல்ல. **நீங்கள் ஆக்கினைக்கேதுவாக கூடிவராதபடிக்கு ஒருவனுக்குப் பசியிருந்தால்**, **வீட்டிலே சாப்பிடக்கடவன்** என்று பவுல் எழுதினார் கிறிஸ்தவர்கள் கூடி வரும்போது உணவை பகிர்ந்து கொள்ளலாம் அல்லது பகிர்ந்து கொள்ளாமல் இருக்கலாம்; ஆனால் அவர்கள் அப்படி செய்தால், உணவு கிறிஸ்துவின் சரீரத்தை ஒப்புக் கொள்ள வேண்டும், ஆனால் நிராகரிக்கக்கூடாது. கிறிஸ்துவுக்குள் சகோதர சகோதரிகளோடு சில கிறிஸ்தவர்கள் சுதந்திரமாக பகிர்ந்துகொள்ள விரும்பவில்லை என்றால், அவர்கள் பசியாற்ற அவர்களுக்கு வீடுகள் இருந்தது. இந்த எச்சரிப்பு, கர்த்தருடைய இராப்போஜனத்திற்கும் ஐக்கிய போஜனத்திற்கும் பெரிய வித்தியாசம்

இருந்தது என்பதை காண்பிக்கிறது. இன்றியமையாததாக, கர்த்தருடைய இராப்போஜனமானது விசுவாசத்தைக் கட்டி எழுப்பும் நிகழ்வாக இருக்கிறது. சமரசத்திற்கு இடமில்லாமல், கர்த்தருடைய நாளில் கூடுகையின் ஒரு பகுதியாக இருந்தது. பவுலுக்கு கொரிந்தியரிடம் தான் அங்கே வந்தபோது இந்த விஷயங்களைக் குறித்துச் சொல்ல அதிகம் இருந்தது என்பதில் சந்தேகமேயில்லை.

## நடைமுறை பயன்பாடு

### கிறிஸ்தவர்கள் மற்றும் வழக்கங்கள் (11:1-16)

முக்காடிடுவதைக் குறித்த கேள்விகள் குறிப்பிட்ட பார்வையாளருக்கு குறிப்பிட்ட காலம் மற்றும் இடத்திற்கு சம்பந்தப்பட்டிருந்தது. கொரிந்தி-யருக்கு, முக்காடிடுவது ஒரு அடையாளமாக இருந்தது. அவர்களுடைய பயன்பாடு அதிமுக்கி-யமான விஷயத்தை சுட்டிக்காட்ட இருந்தது. புருஷர்கள் சபை மற்றும் ஆராதனையில் ஒரு தலைமைத்துவத்தை எடுத்துக் கொள்ள அப்போஸ்தலர் விரும்பினார். ஸ்திரீ முக்காடிடாமல் அல்லது புருஷன் முக்காடிட்டு இருக்கும்போது, அந்த பழக்கமானது சபை தலைமைத்துவத்திற்கு தேவனுடைய திட்டத்திற்கு கனவீன தரக்கூடியதாக இருந்தது என்று அறிக்கையிட்டது. கூடுதலான சிக்கலாக, விக்கிரக ஆராதனையில் புருஷர்கள் முக்காடிட்டிருக்க வேண்டியிருக்கக் கூடும். புருஷ தலைமைத்துவத்தை அடையாளம் காட்டும் பழக்கத்தை பவுல் தழுவினார்; விக்கிரக ஆராதனையின் பழக்கங்களை ஆதரிக்கும் பழக்கத்தை அவர் நிராகரித்தார்.

கொரிந்தியருக்கு பவுலின் கடிந்து கொள்ளுதல்கள் இன்றைய கிறிஸ்தவர்களுக்கு கீழ்க்கண்ட பாடங்களை கற்பிக்கிறது: (1) ஒரு பழக்கமானது ஒழுக்கத்தில் நடுநிலையிலிருந்தால், விசுவாசிகள் அந்த பழக்கத்தை கனப்படுத்த திறம்பட செய்கிறார்கள். (2) ஒரு சமுதாய பழக்கத்தை அது சொல்லப்பட்ட சூழலிலிருந்து பிரிக்க லாகாது. கிறிஸ்தவர்கள் பழக்கத்தை கனப்படுத்துவது அல்லது கனப்படுத்தாமல் இருப்பது, பழக்கத்தில் ஒழுக்கம் அல்லது மதத்தின் சம்பந்தப்பட்ட காரியங்களை கணக்கிட வேண்டும். (3) ஒரு சமுதாய பழக்கத்தில் தவிர்க்கமுடியாத அடையாள மதிப்புகள் உண்டு, அது கண்ணியமான, கிரமமுள்ள உலகத்தை வலுவூட்டுகிறது மற்றும் இதில் கிறிஸ்துவின் போதனைகள் வெறித்து செழிக்கத் தொடங்க வாய்ப்பிருக்கிறது. (4) கிறிஸ்தவர்களாக, விசேஷமாக இருக்கும் ஒழுக்கம் மற்றும் மதத்தை குறித்த காரியங்களில் நாம் ஒரு நிலை எடுக்க வேண்டும். ஒரு தனிப்பட்ட அறிக்கையிட அல்லது ஒருவருடைய சுதந்திரத்திற்காக சமுதாய பழக்கங்களை புறக்கணிப்பது, ஞானமற்றது மற்றும்

கிறிஸ்துவுக்காக அபாயமாக இருக்கும்.

## கர்த்தருடைய இராப்போஜனம்: நினைவுகூருதல் மற்றும் இன்னும் அதிகமானது (11:17-34)

கிறிஸ்தவர்களுக்கு, கர்த்தருடைய நாளில் ஒன்று சேருவது என்பது நம்முடைய மத வாழ்வில் முக்கியமான நிகழ்வாக இருக்கிறது. நாம், நம்முடைய விசுவாசத்தை அறிவிக்கும் படியாகவும், மற்றவர்களுடன் சகவாசத்தை அனுபவிக்கவும், ஒருவரையொருவர் உற்சாகப்படுத்தவும், மற்றும் எல்லாவற்றிற்கும் மேலாக தேவனை ஆராதிக்கவும் சமூகமாக கூடி வரும் ஒன்றாகவும் இது இருக்கிறது. வாரத்தின் முதலாம் நாளில் சபை கூடுவதின் நோக்கம் என்ன என்ற கேள்விக்கான பதில் விசுவாசிகளுக்கு தயாராகவே இருக்கிறது. இரண்டு பரிசீலனைகளை குறிப்பிட வேண்டியிருக்கிறது.

முதலாவது, *கிறிஸ்தவர்கள் ஒருவரோடொருவர் தங்கள் நம்பிக்கையின் அறிக்கையிட செய்யவும் மற்றும் ஒருவரையொருவர் தாங்கவும் மற்றும் தெய்வீகமான, பணியால் நோக்கம் உடையவர்களாய் ஒருவரையொருவர் உற்சாகப்படுத்தவும் கூடி வருகிறார்கள்.* சபை கூடுதல் என்பது ஐக்கியத்தில் எல்லா பகுதியிலும் ஒவ்வொருவரோடான சகவாசத்தை அனுபவிப்பதே ஆகும். நாம் ஒன்றாக இருப்பதின் உச்சகட்ட ஆத்மீக சந்தோஷத்தை அனுபவிக்கிறோம். அக்காரணத்தைக் கொண்டு, எபிரெயரின் எழுத்தாளன் இவ்வாறாக எழுதினார், “மேலும், அன்புக்கும் நற்கிரியைகளுக்கும் நாம் ஏவப்படும்படி ஒருவரையொருவர் கவனித்து சபை கூடிவருதலைச் சிலர்விட்டு விடுகிறது போல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்திசொல்லக் கடவோம்” (எபி. 10:24, 25).

சபை கூடி வருவதின் அம்சம் கிறிஸ்தவ நோக்கத்துடன் கூடுவதே; ஆனாலும் நம்முடைய கூடுதலுக்கான இரண்டாவது, மிக முக்கியமான ஒரு உத்தேசமும் உண்டு. *கூடுகையானது ஆராதனைக்குரியதாகவும் இருக்கிறது.* கூடுகையில், பக்தி மற்றும் சிந்தனைக்குரிய ஸ்தோத்திரமும் விசுவாசிகளின் பலத்தைக் கொண்டுள்ள, தேவநோக்குடன் இருக்கிறது. நாம் ஆராதிக்கும் தேவன், அவரை ஆராதிக்கும் படியான நம்முடைய தடுமாறும் முயற்சிகளில் அவர் அனுதாபம் நிறைந்தவராய் இருப்பார் என்று நாம் விசுவாசிக்க வேண்டும்.

ஆராதனையில் வேறு அம்சங்களைப் போலவே கர்த்தருடைய இராப்போஜனமும், ஒன்றுக்கும் அதிக-மான உத்தேசத்தை கொடுக்கிறது. “கர்த்தருடைய இராப்போஜனம் என்றால் என்ன? நாம் கூடி வரும் போது ஏன் அப்பத்தையும் ரசத்தையும் எடுத்துக் கொள்கிறோம்? கர்த்தருடைய இராப்போஜனம் என்பது

ஐக்கியத்திற்குரியதா, அல்லது ஆராதனைக் குரியதா? ஆராதனை மற்றும் ஐக்கியம் எப்படியாக ஒன்றுக்-கொன்று சம்பந்தப்படுகிறது?"

ஒவ்வொரு வாரத்தின் கடைப்பிடித்தல் என்பது மூன்று காரியங்களைப் பற்றியதாக உள்ளது. தேவன் நமக்கு கொடுத்திருக்கும் இந்த வாரத்தின் நிகழ்வுகளின் பூரண அர்த்தத்தையும் நாம் எண்ணிப் பார்க்கலாம்.

*பின் நோக்குவது.* மிக தெளிவாகவே, அப்பம் பிட்குதல் மற்றும் பானம் பண்ணுவது ஒரு திரும்பிப் பார்ப்பதாகும்; அவைகள் நினைவுகள் ஆகும். நசரேயனாகிய இயேசு தேவனுடைய குமாரன் என்ற பொதுவான அறிக்கையினாலே ஒன்று கூடி இருக்கிறார்கள். அவர் தேவனுடைய வலது பாரிசத்தில் ஆளுகை செய்பவராய் அவருடைய கிறிஸ்துவாக இருக்கிறார். இயேசு என்ற மனிதனில் தேவன் மனித ரூபத்தை எடுத்தார். நாம் வாசிக்கிறோம்,

> நம்முடையபலவீனங்களைக் குறித்துப் பரிதபிக்கக் கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாத வராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார். ஆதலால், நாம் இரக்கத்தைப்பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ் செய்யுங்கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத் தண்டையிலே சேரக்கட வோம் (எபி. 4:15, 16).

தேவனுடைய பிள்ளைகள், விழா நாட்களின் எக்காள சத்தத்திற்கு, (லேவி. 25:9-12), அவர்களின் சிறப்பு வாய்ந்த வரலாறினால் வரையறுக்கப்படுகிறார்கள் (ஆதி. 9:13). தேவன் எல்லா காலங்களிலும் தன்னுடைய ஜனங்களை சுற்றிலும் நினைவு களினாலே சுற்றியிருக்கிறார். தேவன் இஸ்ரவேலில் தனக்கு சொந்த ஜனம் என்று சொன்ன போது, அந்த நிகழ்வை ஆசரிக்கும்படி பஸ்காவைக் கொடுத்தார். ஒன்பதாம் மாதத்தில், வனாந்திரத்தில் நாற்பது ஆண்டுகளின் நினைவாக, தேசம் சாவடிகளை ஸ்தாபித்து அதனுள் படுத்துக்கொண்டது. இஸ்ரவேலர்கள் யோர்தானை தாண்டியபோது, யோசுவா ஜனங்களுக்கு யோர்தானிலிருந்து கொண்டுவந்திருந்த பன்னிரண்டு கற்களையும் நதிக்கரையில் நாட்டும்படி சொன்னார் (யோசு. 4:20, 21). ஜனங்கள் தங்களுக்கு மிக பிரியமான கொடையாளர்களையும் உட்பட காரியங்களையும் மறந்து விடுகிறார்கள். அப்பம் பிட்டு பானம் பண்ணுகையில், கிறிஸ்தவர்கள் காலத்தை பின்னோக்கி பார்க்கிறார்கள். கிறிஸ்தவர்கள் தங்களுடைய சமகாலத்தவர்கள் மற்றும் நமக்கு முன்பாக கடந்து சென்றிருக்கும் எல்லா விசுவாசிகளோடுங் கூட தங்கள் மனதை இணைக்கிறார்கள். நாம் நினைவுகூருகிறோம். தேவன் அவருடைய உடன்படிக்கையைக் காத்துக் கொண்டார்; அவர் தம்மைத்தாமே வெறுமையாக்கி மனுஷ சாயலானார் (பிலி. 2:6, 7). அவர் பாவத்தில் மரித்திருந்த ஜனங்களை இரட்சிப்பதற்காகவே பாடுபட்டு மரித்தார். கர்த்தருடைய இராப்

போஜனத்தில்; விசுவாசிகள் அவருடைய கிழிக்கப்பட்ட சரீரத்தையும் சிந்தப்பட்ட இரத்தத்தையும் நினைவுகூருகிறார்கள்.

*சுற்றிலும் பார்ப்பது.* அப்பம் பிட்குதலில், கிறிஸ்தவர்கள் திரும்பிப் பார்க்கிறார்கள்; நாம் சுற்றிலும் கூட பார்க்கிறோம். கர்த்தருடைய இராப்போஜனமானது கிறிஸ்துவின் சரீரத்தின் உள் ஒரு ஐக்கியமாக இருக்கிறது. பகிர்ந்துகொள்ளப்பட்ட அப்பம் மற்றும் பானமானது ஒரு பொது விசுவாசத்தை வெளிப் படுத்துவதாகும். இராப்போஜனத்தின் மூலமாக, இயேசுவை கிறிஸ்துவானவர் என்று நாம் அறிக்கையிடுகிறோம் மற்றும் ஒருவரையொருவர் அவ்வாறு செய்ய ஊக்கமளிக்கிறோம். "நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியமாயிருக் கிறதல்லவா?" பவுல் இவ்வாறாக கேட்டார், "நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா?" (1 கொரி. 10:16). கர்த்தருடைய இராப்போஜனமானது, ஆவியினால் உறுதி செய்யப்பட, உலகத்தில் பாவத்திற்கு எதிராக போராடிக்கொண்டிருக்கும் கிறிஸ்துவின் ஜீவனுள்ள சரீரமாக இருக்கிறது. ஒருவரோடொருவர் மற்றும் கிறிஸ்துவோடு இருக்கும் ஐக்கியமே இந்த நிகழ்வாக இருக்கிறது. விசுவாசிகளாக, நாம் பானம் பண்ணி அப்பத்தைப் பிட்கிறோம்; ஆனால் நாம் ஜனங்களாக ஒன்று சேர்ந்து அதை செய்கிறோம். சபையானது கர்த்தரின் இராப்போஜனத்தில் பங்கு பெறும்போது, காலகாலமாக, நம்முடைய விசுவாச தகப்பன்மார்கள் மற்றும் தாய்மார்கள் நினைவு கூர்ந்தபடியே நினைவு கூருகிறோம்.

கர்த்தருடைய இராப்போஜனத்தில் ஒற்றுமையானது ஒரு சபையின் எல்லையைவிட அப்பாற்பட்டதாய் இருக்கிறது. எல்லா இடங்கள் மற்றும் சமயங்களிலும், தேவனுடைய ஜனங்கள், கிறிஸ்துவின் சபையின் அங்கத்தினர் ஒன்று சேர்த்து, தேச எல்லையளவில் ஒருவரையொருவர் தாங்குகிறார்கள். பசிபிக் பெருங்கடலில் ஒரு இடத்தில் கர்த்தரின் நாள் தொடங்கும்போது, விசுவாசிகள் ஒன்று கூடி ஆராதிக்கிறார்கள். கர்த்தருடைய இராப் போஜனத்தில், அவர்கள் கண்கூடாகவே தங்களின் பொது அறிக்கையை செய்கிறார்கள்: கிறிஸ்து மனித பாவத்திற்காக மரித்து மறுபடியும் உயிர்த்தெழுந்தார். இந்த நாள் மற்றும் இராப்போஜனத்தின் மூலமாக, விசுவாசிகள் மீட்கப்பட்ட ஒரு பெருங் கூட்டத்தோடு இணைகிறார்கள் கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்குகொள்கையில், இயேசுவின் மாதிரியின் வாழ்வை வாழ பொதுவான பொருத்தனையை செய்கிறோம், மற்றும் நாம் நித்திய ஜீவனின் பொதுவான விசுவாசத்தை ஒன்று சேர்ந்து எதிர் பார்க்கிறோம். கர்த்தருடைய இராப்போஜனம் திரும்பிப் பார்ப்பதாகும், அதுமட்டுமல்லாமல், நாம் ஒருவரோ டொருவரிடத்தில் கற்றுக் கொள்ளும்போது, ஒருவரோடொருவர் உடன் வளரும் போது, ஒருவரையொருவர் சரிசெய்வதில், ஒருவரையொருவர் தாங்குவதில்

மற்றும் ஒருவரில் ஒருவர் அக்கறை கொள்ளுவதில் நம்மைச் சுற்றி பார்ப்பதாகும்.

கிறிஸ்தவனாக இருப்பது, ஒரு நபர் அவனுக்கும் அல்லது அவளுக்கு கர்த்தருக்கும் நடுவில் எடுக்கும் ஒரு தீர்மானம் மட்டுமல்ல. அது சரீரத்தின் வாழ்வில் பங்கெடுப்பதும் கூட ஆகும். இயேசு மற்றும் அவருடைய சரீரம், சபை, பிரிக்கமுடியாதது. கர்த்த ருடைய இராப்போஜனமானது ஒரு அனுபவமாக இருக்கிறது.

*முன்னோக்கி பார்ப்பது.* ஒரு நினைவுகூருதல் மற்றும் ஒருவரோடொருவர் விசுவாசத்தை அறிக்கை செய்வதோடு கூட, கர்த்தருடைய இராப்போஜனமானது ஒரு சாட்சியாக இருக்கிறது. பரலோகத்தை முன்னோக்கி பார்க்க ஒரு அழைப்பாக இருக்கிறது. அப்பம் மற்றும் பானமானது கர்த்தர் திரும்பி வருவதாக கொடுத்த வாக்குத்தத்தத்தின் ஒரு ஞாபகப்படுத்துதலாக இருக்கிறது. "ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்த பாத்திரத்தில் பானம்பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்" (11:26) என்று பவுல் எழுதினார். மதச்சார்பற்ற இந்த உலகம், காலம் கடந்துகொண்டிருக்கிறது என்பதை நிராகரிக்கிறது. நாஸ்திகர்கள், ஒரு விண்கற்கள் தாக்கும்போது இந்த உலகம் முடிந்துவிடும் அல்லது மனிதர்கள் அணுகுண்டால் அதைப் பாழடையச் செய்வார்கள் என்று நினைக்கிறார்கள். தெய்வபக்தியில்லாதவர்களின் பார்வையில், இவைகளெல்லாம் வாய்ப்பின் விஷயமாக இருக்கிறது, மற்றும் என்ன நடந்தாலும் ஒரு பொருட்டல்ல என்று கருதப்படுகிறது.

வரலாறு முடிவை நோக்கி சென்று கொண்டி-ருக்கிறது என்பது சுவிசேஷ செய்தியின் அடித்தள முகவுரையாக இருக்கிறது. இந்த பூமியின் எதிர்காலம் ஏதோ ஒரு வாய்ப்போ அல்லது சூழ்நிலையின் காரியமோ கிடையாது. இந்த பூமியிலே நசரேய-னாகிய இயேசுவாக வாழ்ந்த அதே கர்த்தர் நம்முடைய இரட்சகராக மற்றும் நியாயாதிபதியாக வருவார். கிறிஸ்தவர்கள் இராப்போஜனத்தை எடுத்துக் கொள்ளும்போது, அது மீண்டும் வரப்போகும் உயிர்த் தெழுந்த கர்த்தரின் பிரதிபலிப்பாகவே இருக்கிறது. இந்த உலகம் மற்றும் மனிதகுலம் எங்கேயோ சென்று கொண்டிருக்கிறது என்று விசுவாசிகள் அறிக்கையிடும் நேரமாக இருக்கிறது. தேவன் இந்த உலகத்திற்கு பொறுப்பாளியாக இருக்கிறார் என்று சபை அங்கீகரிக்கிறது.

*முடிவு.* கர்த்தருடைய இராப்போஜனமானது, பின் நோக்கும் விசுவாசத்தின் ஒரு அறிக்கையாக இருக்கிறது; அது சுற்றிப் பார்ப்பது போலவே இருக்கிறது. அது எதிர்ப்பார்ப்பு மற்றும் நம்பிக்கையின் வெளிப்பாடாக இருக்கிறது. இராப்போஜனம் ஜீவனுக்கு உறுதியளித்தல், நம்பிக்கைக்கு உறுதியளித்தல், சமுதாயத்துக்கு

உறுதியளித்தல், இவைகளின் நிகழ்வாக, இருக்கிறது. அது என்ன இருந்தது, என்ன இருக்கிறது, மற்றும் என்னவாக இருக்கும் என்பதில் கவனம் செலுத்துகிறது. அது நம் மனதை சிலுவையண்டை திருப்புகிறது. ரோம உலகத்தில் தோல்வியின் சின்னமாக இருந்த நிகழ்வில், கிறிஸ்து வெற்றியின் சின்னமாக மாற்றினார். இரட்சிக்கப்பட்டவர்களுக்கு தேவனோடு உடன்படிக்கையுண்டு என்று கர்த்தரின் இராப்போஜனமானது சொல்லுகிறது.

---

குறிப்புகள்

[1]Anthony C. Thiselton, "Realized Eschatology at Corinth," *New Testament Studies* 24 (July 1978): 521. [2]Richard E. Oster, Jr., *1 Corinthians*, The College Press NIV Commentary (Joplin, Mo.: College Press Publishing Co., 1995), 253-75; Richard Oster, "When Men Wore Veils to Worship: The Historical Context of 1 Corinthians 11.4," *New Testament Studies* 34 (October 1988): 481-505. [3]Oster, *1 Corinthians*, 258. [4]Joseph A. Fitzmyer, "Another Look at ΚΕΦΑΛΗ in 1 Corinthians 11.3," *New Testament Studies* 35 (October 1989): 510. Wayne Grudem, "Does Κεφαλη (Head) Mean 'Source' or 'Authority Over' in Greek Literature? A Survey of 2,336 Examples," *Trinity Journal*, new series 6 (Spring 1985): 38-59ல் ஒரு நல்ல கலந்துரையாடல் வழங்கப்படுகிறது. [5]நடுத்தர மற்றும் கீழ்-வகுப்பு பெண்கள் "தங்கள் வீடுகளில் கிட்டத்தட்ட முழுமையாக தங்கினர்" Walter K. Lacey கண்காணித்தார். (Walter K. Lacey, "Women, Position of," in *The Oxford Classical Dictionary*, 2nd ed. [Oxford: Clarendon Press, 1970], 1139.) [6]Jack P. Lewis வித்தியாசமான பார்வையை கொண்டிருந்தார். பவுல் 1 கொரிந்தியர் 11:4-16ல் முக்காடிட்டுகொள்ளுவதை பற்றி கலந்துரையாடல் செய்தபோது சபை பிரச்சினை இல்லை என்று அவர் வாதிட்டார் மற்றும் சபை ஒன்றாக கூடுவதை பற்றி 11:17, 18 வரை வரவில்லை. (Jack P. Lewis, "The Role of Women in the Assembly: Epistles of Paul," in *These Things Are Written: Bible Lectures Presented at Harding from 1952 to 2012* [Searcy, Ark.: Truth for Today World Mission School, 2013], 700-2.) [7]Ben Witherington III, *Conflict and Community in Corinth: A Socio-Rhetorical Commentary on 1 and 2 Corinthians* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1995), 232. [8]Oster, "When Men Wore Veils," 493-97. கிரேக்க, ரோமன் மற்றும் யூத கலாச்சாரங்களில் தலையை மூடுவதற்கு ஆதாரங்கள் இல்லை என்று Gordon D. Fee தவறாகப் புரிந்துகொண்டார். (Gordon D. Fee, *The First Epistle to the Corinthians*, The New International Commentary on the New Testament [Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1987], 507-8.) [9]Oster, "When Men Wore Veils," 504. ஒரு பாலஸ்தீனிய அல்லது ஒரு புலம்பெயர்ந்த யூத சந்தர்ப்பத்தில் முக்காடிட்டு கொள்ளுவதை பெண் கீழ்ப்படிதலைக் காட்டியிருப்பதாக அவர் எடுத்துக்காட்டியிருந்தால், Osterன் வழக்கு வலுவாக இருக்கும். எபேசியர் 5:23 ஆண் மற்றும் பெண் உறவுகளின் பெரிய கேள்விக்கு எபிரெயர் 5:23 காரணமாக இருக்கலாம், Oster, இந்த வசனத்தை கருத்தில் இருந்து அகற்ற வேண்டும் என்று கூறுவது ஆச்சரியமாக இருக்கிறது. [10]Everett Ferguson, "Of Veils and Virgins: Greek, Roman, Jewish, and Early Christian Practice," *Restoration Quarterly* 56 (Fourth Quarter 2014): 241.

[11]Ibid. [12]William F. Orr and James Arthur Walther, *1 Corinthians*, The Anchor Bible (Garden City, N.Y.: Doubleday & Company, 1976), 260. [13]Hans Conzelmann, *1 Corinthians*, trans. J. W. Leitch, Hermeneia (Philadelphia: Fortress Press, 1975), 185. [14]David E. Garland, *1 Corinthians*, Baker Exegetical Commentary on the New Testament (Grand Rapids, Mich.: Baker Academic, 2003), 520. [15]Garland, 529. [16]Herodotus *Persian Wars* 1.82.7. [17]Garland, 534-35. [18]Gerd Theissen, *The Social Setting of Pauline Christianity: Essays on Corinth*, trans. and ed. John H. Schütz (Philadelphia: Fortress Press, 1982), 148-49. [19]Raymond C. Kelcy படி, கொரிந்தியர் "கர்த்தருடைய பந்திக்கு முன்கூட்டியே" பொதுவான உணவை உட்

கொண்டாரகள். (Raymond C. Kelcy, *First Corinthians*, The Living Word Series [Austin, Tex.: R. B. Sweet Co., 1967], 51-52.) "கர்த்தருடைய பந்திக்கு" முன் ஒரு உணவை புசிக்கிற முறை 11:33ன் உட்குறிப்பு ஆகும்: "… நீங்கள் போஜனம்பண்ணக் [ஒரு பொதுவான உணவு], கூடிவரும்போது, ஒருவருக்காக ஒருவர் காத்திருங்கள்." [20]Patristic காலத்தில் உள்ள வார்த்தையை பற்றி G. W. H. Lampe, *A Patristic Greek Lexicon* (Oxford: Clarendon Press, 1961), 785-86ல் தகவல் கொடுக்கப்பட்டுள்ளது.

[21]ஒருவேளை கொரிந்துவிலுள்ள பொதுவான உணவு யூதா 12 மற்றும் 2 பேதுரு 2:13 "அன்புள்ள விருந்துகளோடு" ஒப்பிடப்படலாம். (These feasts are discussed in Duane Warden, *1 & 2 Peter and Jude*, Truth for Today Commentary [Searcy, Ark.: Resource Publications, 2009], 385-87.) [22]Wayne A. Meeks, *The First Urban Christians: The Social World of the Apostle Paul*, 2nd ed. (New Haven, Conn.: Yale University Press, 2003), 68. [23]"Eucharist" என்ற வார்த்தையை சில மத குழுக்கள் "கர்த்தருடைய பந்தியை" குறிக்க பயன்படுத்திய சொற்கூறு, "நன்றி" அல்லது "துதி" என்ற கிரேக்க வார்த்தையின் ஆங்கில தழுவலாகும். [24]Augustine *Confessions* 7.10.16. [25]Fee, 557.